காஞ்சிபுர மகாத்மியம்.

... TO CONJEEVERAM.

by

C. P. RANGANATHAN.

அஎ: 38.2112.K
N31
68853

Copyright Registered.]

டவுன் பிரஸ், காஞ்சிபுரம்.

[விலை 0-2-6.

நிறைந்த பலம். குறைவற்ற ஆரோக்யம். அளவிலா வீர்யம்.

33 வருஷங்களாக உலகப் பிரசித்தி பெற்றுவரும்

வைத்தியரத்ன பண்டிட்

D. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம்.

(ரெஜிஸ்டர்ட்)

நீடித்த காலமாக மனித வர்க்கத்திற்கு ஆரோக்யமெனும் பெரும் ஐஸ்வர்யத்தை உத்திரவாதத்துடனும், நம்பிக்கையுடனும் அளித்துவரும் சொல்லற்கரிய சிறப்புடைய இவ்வௌஷதம் பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, சோகை, ஆயாசம், மனச்சோர்வு, ஞாபகமின்மை, தூக்கமின்மை, பசியின்மை, மலபந்தம், தலைவலி முதலியவைகளைப்போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரத்தவோட்டத்தையும், நிறைந்த பலத்தையும், குறைவற்ற ஆரோக்யத்தையுங் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் தசைகளை வலுப்படுத்தி அளவிலா வீர்யத்தை பெருகச் செய்கின்றது. இன்றே உட்கொள்ளத் தொடங்குங்கள்.

விலை புட்டி 1-க்கு ரூபா 3—4—0.

கேட்லாக் இனம். எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

டெலிபோன் நெ. 2191.	**ஆயுர்வேதாஸ்ரமம்,** 151, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, போஸ்ட் பாக்ஸ் நெ. 287, மதராஸ்.	தந்திவிலாசம்- "பண்டிட்" மதராஸ்.

1. மெடிகல் ஸ்டோர்ஸ், திருநெல்வேலி டவுன்.
2. A. V. D. பாக்யம் பிள்ளை, ஜெனரல் மெர்ச்சண்டு, தூத்துக்குடி.
3. C. ஆறுமுகம் பிள்ளை, ஷாப் கீபர், மெயின்ரோட், திண்டுக்கல்.
4. T. N. C. நாகலிங்கம் பிள்ளை, 36, வடக்குசித்திரை வீதி, மதுரை.
5. விநாயகர் மெடிகல் ஹால், தெப்பகுளம், திருச்சிராப்பள்ளி.
6. ராஜாராம் டிரக் & மெடிகல் ஸ்டோர், ஐயங்கடைவீதி, தஞ்சை.
7. V. அண்ணாமலை பிள்ளை & சன்ஸ், மருந்துஷாப், பெரியகடை வீதி, கும்பகோணம்.
8. S. T. சௌந்தரராஜ பிள்ளை & சன்ஸ், நாகபட்டணம்.
9. B. வெங்கட கிருஷ்ண செட்டி, ஜெனரல் மெர்சண்டு, மாயவரம்.
10. S. லக்ஷ்மி & Co., மருந்துஷாப், திருப்பாபுலியூர், கடலூர். N.T.
11. T. சின்னசாமி செட்டி, ஷாப் கீபர், விழுப்புரம்.
12. தேவராஜ முதலியார் & பிரதர்ஸ், மருந்துகடை, ஆடிசன்பேட்டை, காஞ்சிபுரம்.
13. V N. ராஜா அண்டு கோ, லாங் பஜார், வேலூர்.
14. P. சோமசுந்தரம் செட்டி, ஜெனரல் மெர்சண்டு, சேலம்.
15. F. S. சிண்டுராய் & கோ., பிரிடிஷ் பார்மஸி, டல்ஹவுசி வீதி, ரங்கூன்.

EXPERIENCE Tells no Other Lamp For Better Satisfaction than the GENUINE "PETROMAX."



The only Incandescent lantern which is recommended to meet the present economic condition of the country for low consumption and high efficiency.

A Novelty of the day, simple in construction, with all latest improvements, having self-contained pumping arrangement, spare parts always available at a very moderate cost, above all burning with any ordinary *Kerosene oil,* working similar to that of an ordinary PRIMUS Stove, within the reach of all and to meet everybody's taste.

Available in different sizes and models, wall hanging, Table and Hand Hurricane pattern.

For full particulars refer to—

Sole Distributors,

K. S. SHIVJI & CO.,

Post Box No. 5,

178-179, Broadway,

MADRAS.



சிவராம அய்யர் பாங்க்

மதராஸ்,	காஞ்சிபுரம்,
25, தேவராய முதலி தெரு,	1[illegible], நடுத்தெரு,
திருவல்லிக்கேணி.	சேக்குப்பேட்டை.

1905-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த பாங்கின் தொழில் நடத்தும் உரிமையை, இதர சில சொத்துக்களுடன் **"ஜாதி வித்யாசம் பாராட்டாமல் ஏழைப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் அன்னமுதவி, கல்வியும் கைத்தொழிலும் கற்பித்தல்"** என்ற தர்மத்துக்காக 1916-ம் வருஷம் எழுதி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஒரு செட்டில்மெண்டு பத்திரத்தால் விநியோகப் படுத்தி யிருக்கிறது.

தற்காலம் குடியினாலும், வறுமையாலும், துன்புற்று வருந்தும் ஏழைமக்களைச் சீர்தூக்கி மேம்படுத்தவேண்டும் என்பதே இந்த பாங்கின் முக்கியமான நோக்கம்.

நண்பர்கள் அனைவரையும் நற்காரியத்தில் சேர்ந்துழைக்கக் கோருகின்றோம்.

காஞ்சிபுரம்,
17-5-31.

S. ஸ்ரீநிவாசன்,
ஏஜெண்ட்.

Ford



NEW FORD PHAETON TOURING CAR,

Price Rs. 2,695.

Ford Dealer:—

Messrs. GORDON WOODROFFEE (MOTORS) Ltd.,

Mount Road, MADRAS.

Apply to:—

Ford Sub-Dealer,

K. Rangaswami,

22, Edotcari Street,

CONJEEVERAM.

Ramakrishna Swadeshi Khaddar
Weaving Factory, Conjeeveram.

Manufacturers of:—

Hand-made dhoties, upper cloths, towels, bed-sheets etc., in different lengths on the improved methods under the direct instructions of the Government Weaving Superintendent and the Demonstrators of the Industries Department.

None but genuine Swadeshi Khaddar yarn is used.

A trial order or a personal visit will ensure entire satisfaction.

A. P. Venkatasami Naidu.
Ekambaranathar Sannadi Street.

காஞ்சிபுரம் ராமகிருஷ்ண
கதர் பாக்டெரி.

விளம்பரம்.

தற்காலம் சுதேசி கைத்தொழில் விர்த்தி யடைந்து நெசவாளருக்கு வேலை கிடைக்கும் பொருட்டும் கவர்ன் மெண்டு இண்டஸ்ட்ரியல் நெசவு டிபார்ட்மெண்டு சூப்பர்வைசர் டிமானிஸ்ரேடர்கள் மேல்பார்வையில் எங்களால் தயார்செய்யப்படும். குறைந்தவிலை. 1. 1¼. 1½. கெஜம் அகலத்தில் 4, 4½, 5, 6, 7, 8, முழம், பாடர்வைத்த வேஷ்ட்டிகளும் பலமாதிரி மேல்துண்டுகளும் ஆரஞ்சி கலர் முதலிய மாதிரி கலர் கதர் சேலைகளும் தயார் செய்யப்படுகிறது.

காஞ்சிபுரம், 22-5-31.

எ. பி. வெங்கிடசாமி நாயுடு,
ஏகாம்பரநாதர் சன்னதி தெருவு.

NO HOUSE

IS

COMPLETE WITHOUT

ELECTRIC LIGHTS

PHONE 2500



OR WRITE

PADMA & CO.

(Formerly SUBRAMANIAM & CO.)

ELECTRICAL ENGINEERS, HOUSE WIRING
& ILLUMINATING CONTRACTORS
AND COMMISSION AGENTS

29, BROADWAY, MADRAS



PADMA PRINTING WORKS, BROADWAY, MADRAS

காஞ்சிபுர மகாத்மியம்.

620
294.535

BY

C. P. ரங்கநாதன்.

டவுன் பிரஸ், காஞ்சிபுரம்.

1931.

Copyright Registered.]

[Price 0-2-6.

Q2:38.2112.K
N31

68853

முகவுரை.

இவ்விதமான ஒரு நூலை எழுதி வெளியிடும்படி கடந்த பதினைந்து ஆண்டுகளாக என் மனதில் தோன்றிய எண்ணத்தை முற்றுப்பெறச் செய்த எல்லாம் வல்ல இறைவனை மனமொழிமெய்களால் வாழ்த்துகின்றேன்.

பொதுஜனத்தொண்டியற்றுவதில் ஈடுபட்டுள்ள யான், பொதுவாக பலகாலங்களிலும், சிறப்பாக உற்சவ காலங்களிலும் பெரும்பான்மையான மக்கள் இங்குள்ள விசேஷங்களைக் கண்டு, களிக்க அவாவுற்று எல்லாவிடங்களையும் குறித்துக் காண்பிக்கும் ஒரு கை நூல் இல்லாக்குறையை நிவிர்த்தி செய்யும் நோக்கத்துடன், இச்சிறிய நூலை வெளிப்படுத்தி யிருக்கின்றேன். இதில் ஸ்தல விசேஷம் யாத்திரீகர் தங்குமிடம், கோவில்களின் சிறப்பு, அவைகளின் புராண இதிகாச வரலாறு முதலியனவும், புராதன நிலைமை, தற்கால நிலைமையும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டும் இருக்கின்றன.

இதில் காணப்படும் குறைகளை அறிஞரன்புட னுவந்தெடுத்துரைப்பாராயின் அவர் மாட்டு நான் என்றும் நன்றி பாராட்டற்குரியேன். அன்றியும், மறு பதிப்பில் அக்குற்றங்களைந்து வெளியிடுவதும் சாலும்.

"குணநாடி குற்றமுநாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

என்றும் வள்ளுவர் வாக்குக்கேற்ப, இதில் காணப்படுங் குற்றங்களைக் களைந்து, குணங் கைக்கொண்டு, மனமுவந்து இவ்வற்ப முயற்சியை ஆதரிக்க வேண்டுகின்றேன்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

காஞ்சிபுரம்,
24—5—31.

C. P. ரங்கநாதன்,
பொதுஜன ஊழியன்.

காஞ்சிபுரம்.

உலகத்தில் பல்வேறு தேயங்களில் உள்ள நாடுகளில் சில, கைத்தொழில், வியாபாரம், புண்ணியஸ்தலம் என்னும் சில காரணங்களை முன்னிட்டு பிரசித்தி பெற்று விளங்குவது இயற்கை. இவ்விதமாக சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் நன்னாடுகளில் ஒன்றாகிய, நிலமகட்குத் திலகம்போல் விளங்கா நிற்கும் இக்கச்சியம் பதியாகிய காஞ்சிபுரமும் ஒன்றெனத்தகும்.

இதைக் காஞ்சி என்றும், அத்திகிரி என்றும், பெருமாள் கோவில், தக்ஷிண காசி, கச்சிப்பதி என்றும் பலவாறு அழைப்பர். முக்தி தரும் நகரங்கள் ஏழினுள் ஒன்றாகிய இந்நகரமானது புராணங்களில் மிகவும் விசேஷித்துக் கூறப்பட்டிருக்கின்றது. இது மிகவும் புனிதமாகக் கருதப்பட்டு, "கழுதையாய்ப் பிறந்தாலும் காஞ்சியில் பிறக்கவேண்டும்" என்றும், "காஞ்சியில் வசிக்க, காசியில் இறக்க முக்தி" என்றும் மக்கள் கூறுகின்றனர்.

பெயரின் காரணம்:—தமிழ் நூற்களில் இது சாதாரணமாக கச்சிப்பதியென்று கூறப்படுகின்றது. இப்பெயர் ஏற்பட்டதற்குப் போதியஆதாரமின்மையால், சிலர் காஞ்சனமென்பது பொன்னுக்குப் பெயரானதுபற்றி, இவ்வூரின் சிறப்பை உத்தேசித்து, அதனோடு சம்பந்தப்படுத்தி, பின்னால் புரம் என்பதற்கு இடம் என்று பொருள் பெறுதலால், இரண்டையும் பொருத்தி காஞ்சிபுரம் என்று வழங்கலாயிற்று என்று புகல்கின்றனர். பின்னுஞ்சிலர், இது வடமொழிப் பதத்தில் கலப்புற்ற ஓர் தனிச் செந்தமிழ் மொழி என்றுங்கூறுவர். இந்திய சரித்திராசிரியரும், பொதுமக்களும் அப்பெயராலேயே அழைக்கின்றனர். ஆனால், அப்பெயரானது நாளடைவில் மருவி காஞ்சீவரம் என்று பிறநாட்டவரால் அழைக்கப் பெறுகின்றது.

இந்நகரமானது சென்னைமாநகருக்குத் தென் மேற்கில் 45 மைல் தூரத்திலுள்ள ஓர் சிறந்த நகரம். இங்கு தென்னிந்திய இருப்புப் பாதையின் மூலமாகவும் தென்மகாராஷ்டிர இருப்புப்பாதையின் வழியாகவும் செல்லலாம். அதுவுமன்றி சென்னையிலிருந்து துரிதமாகவும் சௌகரியமாகவும் செல்வதற்கு அனுகூலமாக மோட்டார் வண்டிகளும் உள. இது செங்கற்பட்டு ஜில்லாவில் ஓர் தாலூக்கா. இங்கு நாடோறும் பற்பல உற்சவங்களும், விழாக்களும் நடைபெற்றபோதிலும், வைகாசிமாதத்தில் நடக்கும் "கருடோற்சவமே" மிகவும் சிறந்தது. இக்கருடசேவையை முன்னிட்டு ஆயிரக்கணக்கான ஜனங்கள் பலவூர்களிலிருந்து வந்தபோதிலும், இவ்வூரானது அதிக விஸ்தாரமாய் இருப்பதினால் ஜனநெருக்கம் என்பது ஏற்படுவதில்லை.

பூர்வீக சரித்திரம்:—

இது ஒரு காலத்தில் புத்தசமயத்துக்கு ஒரு குரு பீடம்போல் விளங்கியிருக்கலாம் என்று எண்ணுவதற்குப் போதிய ஆதாரங்கள் உள. இது ஏறக்குறைய ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்டிருக்கலாம் என்று அனுமானிக்க இங்கேயிருக்கும் புராதீனமான கட்டடங்கள் போதுமான ஆதாரங்களாகும்.

சீன தேசாந்திரியாகிய ஹியூன்டிஸாங் என்பவர் இத்தலத்துக்கு கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வந்து இந்நகரைப் பற்றிய சிலகுறிப்புகள் எழுதிச்சென்றனர். அவைகளிருந்து நாம் சில விஷயங்களை அறிவதற்கு வழியுண்டு. அவர் கி.பி. 640ல் புத்தர் இவ்வுலகத்தில் ஜீவித்திருந்த காலையில் அடிக்கடி இவ்வூருக்கு விஜயம் செய்ததாகவும் சமயப்பிரசாரஞ்செய்து அநேகரைப் புத்தர்களாக்கினதாகவும் கூறுகிறார். இலங்கையில் மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "மகாவம்சம்" என்னும் புத்தமதக் கிரந்தத்தில், அசோகர் பலவிடங்களுக்கு அனுப்பின் புத்தமதப் பிரசாரகர்களின் வரலாறுகளைப்பற்றிக் கூறுகையில், காஞ்சிபுரம் அதில் சம்பந்தப்பட்டிருப்பதால், புத்த சமயம் இங்கு பரவியிருந்ததென்று அறியக்கிடக்கின்றது. அதுவுமன்றி அவர் இங்கு தர்மபாலன் என்னும் அரசன் பிறந்ததாகவும், இதற்குச் சமீபத்தில் அசோகர் அநேக ஸ்தூபிகளைக் கட்டியதாகவும் கூறுகின்றனர். ஆனால் தற்காலத்தில் புத்தமதம் ஒருகாலத்தில் இங்கு

பரவியிருந்தது என்று நிரூபிப்பதற்கு யாதொரு விதமான குறிப்புகளும் காணக்கிடையா. ஏனெனில் அக்காலத்துக்குப்பின் உண்டான இந்து, ஜெயின மதத்தினரால் அவ்வாலயங்களும், அவைகளைப் பற்றிய குறிப்புகளும் அழிந்து போயிருக்கலாம் என்று ஊகிக்க ஏதுவுண்டு.

பின்னும் அவர் "இந்நகரமானது 6 மைல் சுற்றளவுள்ளதாகவும் அதிலுள்ள மக்கள் யுத்தவீரரும், 'பக்த சிரோன்மணிகளும் மகா வீரருமாயிருந்தனரென்றும், தாம் இதர இடங்களில் சந்தித்த மக்களைப் போலிராமல், நீதி தவறாத நடக்கையும், வித்துவான்களை ஆதரித்து கல்வியை விருத்தி செய்யும் ஆர்வமுடையவர்களாக இருந்ததாகவும், இங்கே ஜெயினர் அதிகமாகப் பரவியிருந்தனர் என்றும், திருப்பருத்திக்குன்றத்தில் ஒரு ஜெயின ஆலயம் இருப்பதாகவும், ஆகையால் புத்தமதமும், ஜெயினமதமும், அக்காலத்தில் விருத்தியடைந்திருந்தன" வென்றும் கூறியுள்ளார்.

திராவிட இராஜ்யம்:—

இது ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் திராவிடர்களின் இருப்பிடமாக இருந்ததாக "மணிமேகலை" என்னும் காவியத்தின்மூலமாக அறியற்பாலது. அக்காவியத்தின்கண் கூறியுள்ள விஷயங்களைக் கவனிக்குங்கால், ஆரியமதமும், திராவிடமதமும் ஒன்றாய்க் கலந்தும் புத்தசமயமும், ஜெயினமதமும் தமக்குள் யாதொரு வேறுபாடின்றி ஒருங்கே நிலவியிருந்தமையும் தெள்ளிதென விளங்கும். இக்காவியமானது இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக்கருதப்படின், மேற்கூறிய சம்பவங்கள் மெய்யென்று கூறுவது மிகையாகாது. ஆயினும் நூலாசிரியரில் சிலர் அது எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கக்கூடும் என்று உரைக்கின்றனர்.

பல்லவ மன்னர்களின் ஆளுகை:—

இதற்குச் சிறிதுகாலத்துக்குமுன் சோழ அரசாட்சி ஏற்பட்டிருந்தது. ஆனல் எதிர்பாராத விதமாய்த் தோன்றிய இவ்விராஜ்யத்துக்குமுன் அதன் நிலைமை சீர் குலைந்து போயிற்று. கி. பி. நான்காம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டு வரைக்கும் இவ்வா

சாட்சியானது மிக்க சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. இக்காலத்தில்தான் சீனதேசாந்திரியாகிய ஹியூன்டிஸாங் என்பவர் இங்கு வந்து சென்றதாக அறியற்பாலது.

பல்லவ நிருபர்களில் சிறந்தவனுகிய இராஜசிம்மன் என்னும் மாறு பெயர்பூண்ட இரண்டாவது நரசிம்மன் என்பவனுல் கி. பி. 670 ஆம் ஆண்டில் கைலாசநாதர் கோவிலிலுள்ள விமானம் கட்டப்பட்டது. அதேவிதமான சிற்பசாஸ்திரங்களின் லட்சணங்கள் பொருந்தாநிற்கும் வைகுண்டப்பெருமாள் கோவிலை அவனுடைய புத்திரனுகிய பரமேசுவரவர்மன் கி. பி. 672ம் ஆண்டில் கட்டிமுடித்தான்.

இதுவுமன்றி மாமண்டூர், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களிலும் பல ஆலயங்கள் நிர்மாணிக்கப் பெற்றன. மகா மல்லபுரம் அல்லது மகாபலிபுரம் என்று வழங்கும் இடத்தின்கண் மிகுந்த சிற்ப வேலைகளினுல் சித்திரிக்கப்பட்டு, அழகாய் விளங்கும் ஏழு இரதங்கள் இவர்களால் நிறுவப்பெற்றன என்பதற்கு இந்நகரில் உள்ள கோவில்களே போதிய சான்றுகளாம். அவ்வரசனுல் காஞ்சியில் கட்டப்பட்ட கோட்டையானது தற்காலத்தில் பல்லவமேடு அல்லது பாலையமேடு என்னும் மண்மேடாய் மிஷன் கலாசாலைக்குப் பின்புறத்தில் பாழடைந்து கிடக்கின்றது.

இவர்களால் நிர்மாணிக்கப்பெற்ற ஆலயங்கள் பெரும்பாலும், புத்த சமயக் கோவில்களைப்போன்று கட்டப்பட்டு, பிரகாரமும், மடங்களைப் போன்ற விதானமும், உள்ளவைகளாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. புத்த சமயமும், ஜைனமதமும் வீழ்ந்ததற்கு இவ்வரசர்களின் ஆலயங் கட்டுவதிலுள்ள சிரத்தை மாத்திரமேயன்றி அக்காலத்திலேயே சைவ மதமும், வைஷ்ணவ மதமும் செழித்தோங்கி பிரபலியமாவதற்குக் காரண பூதராயிருந்தவர்கள் அப்பர், திருஞானசம்பந்தர், ஆழ்வார் முதலியவர்கள். இவர்களில் திருஞான சம்பந்தரியற்றிய "திருவாசகத்துக்கு உருகார், ஒருவாசகத்துக்கும் உருகார்" என்னும் சிறப்புற்ற தேவாரமும், ஆழ்வார்களியற்றிய நாலாயிரப் பிரபந்தமும், மக்களின் மனதைக் கவர்ந்ததினுல், புத்த மதமும், ஜெயின மதமும் சிதையலாயின. இவர்களில் அநேக வித்வ சிரோன்மணிகள் இங்கே வதிந்திருந்தனர் என்றும் அறியக் கிடக்கின்றது.

பின்னும், இவ்வரசாட்சியின் பிற்பகுதியில் அத்வைத மதஸ்தாபகராகிய ஆதிசங்கராசாரியர், மலையாளத்திலுள்ள காலடி என்னும் இடத்தில் பிறந்து, வளர்ந்து இங்கு போந்து தமது மதத்தைப் பிரசாரம் செய்யலானார் என்று நூற்புலவர் கூறுகின்றனர்.

அன்றியும் வடகலை என்று கூறப்படும் பிரிவை ஸ்தாபித்த வேதாந்த தேசிகர் என்பவரும் இங்கே பிறந்ததாகக் கூறப்படுகின்றது.

சோழமன்னர்களின் ஆளுகை:—

இந்நகரமானது கி.பி. எட்டாவது நூற்றாண்டில் சோழ வேந்தனாகிய குலோத்துங்கனால் ஜெயிக்கப்பட்டது. அப்பொழுது காஞ்சிமாநகரம் சோழராஜ்யத்தின் தலை நகராய் சிறந்து விளங்கியது. அவர்களது அரசாட்சி கி.பி. பதினான்காவது நூற்றாண்டு வரையில் சிறப்புற்று விளங்கியது. அம்மன்னர்களில் பலர், புது ஆலயங்களை நிர்மாணிப்பதிலும், பழைய ஆலயங்களைப் புதுப்பித்துக் கட்டுவதிலும் மிகுந்த சிரத்தையெடுத்து வந்ததாகப் பலசாசனங்கள் கூறுகின்றன. இவர்கள் காலத்திற்றான், சிவ ஆலயங்களுக்கும் விஷ்ணு ஆலயங்களுக்கும், பல நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன. பல நூலாசிரியர் தற்போது இருக்கும் ஆலயங்களெல்லாம் முற்காலத்தில் ஜெயின ஆலயங்களாக விருந்தனவென்று கூறுகின்றனர்.

ஆனால், கி.பி. பதினோராம் நூற்றாண்டில் விசிஷ்டாத்வைத மதஸ்தாபகரான இராமாநுஜாசாரியர் காஞ்சிக்குக் கிழக்கே 20 மைல் தூரத்திலுள்ள ஸ்ரீபெரும்பூதூர் என்னும் இடத்தில் அவதரித்து, இங்கே வந்து கல்வி கற்று, தமது சமயப்பிரசாரஞ்செய்து, அநேக மக்களை வைஷ்ணவராக்கினதாகவும், பல நூல்களிலிருந்து விளங்குகின்றது. அவரது இடையறா முயற்சியின் தன்மையினால், வைஷ்ணவ மதமானது நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து செழித்தோங்கியது.

விஜயநகர அரசர்களின் ஆட்சி:—

இங்கே பலவிதமான கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டு அதற்கிடையே இவ்வரசாட்சி தோன்றி கி.பி. பதினைந்தாம் நூற்

றுண்டிலிருந்து கி. பி. பதினேழாம் நூற்றுண்டு வரைக்கும் சீர்பெற்றிலங்கியது.

இந்நகரமானது தொண்டைமண்டலத்தின் தலைநகராகவும், ஓர் இராஜதானிப் பட்டணமாகவும் விளங்கா நின்றது. இது விஜய நகரத்தரசர்களால் வெகு புனிதமாகக் கருதப்பட்டு வந்தது. அம் மன்னர்களில் பலர் சில சமயங்களில் விஜயஞ்செய்து, ஆலய வழிபாடு செய்வதும் உண்டு. விஜயநகர பரம்பரையின் ஓர் அரசனுக்கு மகுடாபிஷேகம் இங்கு சிறப்பாக நடைபெற்றதாய்ச் சில சாசனங்களிலிருந்து காணப்பெறுகின்றது.

அப்பார்த்திபர்களில் பலர் சிறு ஆலயங்களைப் பெரிதாகக் கட்டியும், அதிக விஸ்தாரமாக அமைத்தும், பற்பல சித்திர வேலைகளும் செய்து மிக அழகாக நிருமித்திருந்ததாகத் தெரியவருகின்றது. பல கோவில்களின் பிரகாரங்களும், மதிற்சுவர்களும், வானமளாவும் உன்னத கோபுரங்களும் அவர்களால் நிறுவப்பெற்றன. பல சாசனங்களிலிருந்து, அவர்கள் இவ்வாலயங்களின் நிர்வாகத்துக்கென்று பல தானங்களும், கொடைகளும் கொடுத்தனர் என்றும், அவர்களது அரசாட்சியின் திறமையைப்பற்றிய பல விவரங்களும், நாம் காணக் கிடக்கின்றது.

கி. பி. 1565 ஆண்டில். இது சீர்குலைந்தபோதிலும், கி. பி. 1646 ஆம் ஆண்டு வரையிலும் சந்திரகிரியைத் தலைநகரமாகக் கொண்டுள்ள ஓர் சிறு இராஜ்யமாக விளங்கியது. கோல கொண்டாவின் சுல்தானுல் அவ்விராஜ்யம் கைப்பற்றப்பட்டபோது, காஞ்சிபுரமும் மகமதியரின் ஆளுகைக்குட்பட்டது.

மகமதியர்களின் அரசாட்சி:—

இது பதினேழாம் நூற்றுண்டின் மத்தியில் ஆரம்பித்தது. ஆனால் கி.பி. 1310ஆம் ஆண்டு டெல்லி சக்கரவர்த்தியாகிய அலாவுதீனுடைய சேனுபதியான மாலிக்காபூர் என்பவன் கைப்பற்றி சூறையாடினதாகக் கூறப்படுகிறது. கி.பி. 1481-ஆம் வருஷம் பீஜபூர் சுல்தானுகிய மகம்மதுஷா என்பவனுல் கொள்ளையாடப்பட்டது. சில சரித்திராசிரியர் "இங்குள்ள கோவில்களில், நவரெத்தினங்கள் இழைக்கப்பெற்று, பொன் தகட்டால் பொதியப்பெற்ற அநேக

விக்கிரகங்களும் கோவில்களும், மாளிகைகளும், செல்வம் சேமித்து வைக்கப்பட்ட பல இடங்களும், நிலச்சுரங்கங்களும் இருப்பதாகக் கேள்விப்பட்டபடியினுல், இங்கு வந்து பல கோவில்களைக் கொள்ளை யிட்டு, அநேக விலையுயர்ந்த ஆபரணங்களையும் சிறந்த முத்துக்களை யும், விலைமதித்தற்கரிய நவமணிகளையும், எழில் வாய்ந்த மங்கை யரையும், அடிமைகளையும் சிறைபிடித்துச் சென்முனென்றும், கோ வில்களை இடித்து நகரத்தையும் பாழ்படுத்திச் சென்றனன்" என்றும் கூறுகின்றனர்.

ஆனுல், இக்கூற்று ஆதாரமற்றதேயாகும். பலகோவில்களின் சொத்துக்கள் கவர்ந்து செல்லப்பட்டாலும், எஞ்சிய கோவில்கள், சொத்துக்களோடு இப்பொழுதும் நிலைபெற்று விளங்குகின்றன.

ஆனுல், சிறிது காலத்துக்குப்பின் கி.பி. 1646-ஆம் ஆண்டிலிரு ந்து கி.பி. 1751-ஆம் ஆண்டு வரைக்கும் கோலகொண்டா இராஜ்யத் தின் ஒரு பாகமாக பிரெஞ்சுக்காரரால் கைப்பற்றப்படும் வரைக்கும் இருந்தது. அதற்குப்பின் அவுரங்கசீப்பின் படைத்தலைவர்களால் ஜெ யிக்கப்பட்டும் முடிவில் கர்நாடக நவாபின் ஆளுகைக்குட்பட்டது. கர்நாடக யுத்தத்தின்போதும், மைசூர் யுத்தம் நடந்த காலங்களி லும், பல அரசாட்சிக்குட்பட்டும், இங்குள்ள பெரிய கோவில்கள் எல்லாம் கோட்டைகளாகவும், உபயோகப்பட்டு வந்தன. கி.பி. 1768-லும் கி. பி. 1780-ஆம் ஆண்டிலும் ஐதரால் கொள்ளையடிக் கப்பட்டு நாசமடைந்தது. அவனுக்குப்பயந்து அநேக விக்கிரகங் களைத் தஞ்சாவூருக்கும் மற்றும் பல இடங்களுக்கும் கொண்டு போகப்பட்டன. இதைப்பற்றிய முழுவிவரங்களையும் வரதராஜப் பெருமாள் ஆலய சம்பந்தமான சாசனத்தில் காணலாம்.

கி. பி. 1759-ஆம் வருஷத்தில் கிழக்கிந்திய கம்பெனியாருக்கு கர்நாடக நவாபாகிய மகம்மதி ஆலியால் கொடுக்கப்பட்டது. அக் காலத்திலிருந்து இந்நாள் வரை இந்நகரமானது ஆங்கிலேயர் வச மிருந்து வருகிறது.

தற்கால நிலைமை:—

இது வடமேற்குக் கோடியிலிருந்து தென்கிழக்குக் கோடி வரை வியாபித்திருக்கிறது. இதன் சுற்றளவு சுமார் 6-மைல். கடந்த

ஜனத்தொகைக் கணக்கின்படி 61,376 பேர் இருக்கின்றனர். ஆண்கள் 30,714 ஸ்திரீகள் 30,662. சென்ற வருஷ ஜன கணிதத்தின்படி ஜனத்தொகை 65,243 அதில் ஆண்கள் 32,321 ஸ்திரீகள் 32,922. அநேகமாய் ஒவ்வொரு தடவை எடுக்கப்படும் கணக்கிலிருந்து ஸ்திரீகளின் தொகை இந்த ஒரு தாலூக்காவில்தான் அதிகமாகக் காணப்படுகிறது. இதில் சீக்கிய மதத்தைச்சேர்ந்த ஒரு மடம் இருக்கிறது. அதில் வட நாட்டு யாத்ரீகர்கள் வந்து தங்குகின்றனர்.

இக்கச்சியம்பதி இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஏகாம்பரநாதர் கோவிலும், அதைச்சார்ந்த இடம் சிவகஞ்சி அல்லது பெரியகாஞ்சிபுரம என்றும், வரதராஜப்பெருமாள் ஆலயத்தை யடுத்துள்ள இடத்திற்கு விஷ்ணு காஞ்சி அல்லது சின்ன காஞ்சிபுரம் என்றும் கூறப்படுகின்றன.

நகர நிர்மாண வல்லுநராகிய கேட்ஸ் என்னும் ஓர் ஐரோப்பியர், இங்கு விஜயம் செய்திருந்த காலை, இது சுகாதார விதிகளுக்கேற்ப அமைக்கப்பட்டிருப்பதாகவும், அகன்ற வீதிகளும், அலங்காரச் சோலைகளும், காண்போர் மனதைக் கவரும் வனப்பு வாய்ந்திருந்த மாளிகைகளும் செறிந்து விளங்கினதாகவும், மற்ற நகரங்கள் இதை மாதிரியாகக்கொண்டு நிர்மாணிக்கப்படின் மிகவும் சிறப்பெய்துமெனக் கூறியுள்ளார். இப்பொழுது நகரமெங்கும் மின்சார விளக்குகள் போட ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. இங்கு பாலாற்றின் கிளைநதியாகிய வேகவதி ஆற்றில் ஊற்றுகள் தோண்டப்பட்டு அந்த ஊற்றுகளிலிருந்து வரும் ஜலமானது யந்திர மூலமாய் இறைக்கப்பட்டு, பலவிடங்களுக்கும், குழாய்களின் மூலமாக அனுப்பப்படுகிறது.

இது கி. பி. 1867-ல் முனிசிபல் பட்டணமாக ஏற்படுத்தப்பட்டது. இப்போது 32 பேர் நிர்வாக சபை அங்கத்தினராக இருக்கின்றனர். இது முதல்தர முனிசிபல் நகரமாக விளங்குகின்றது. இங்கு கௌன்சிலர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அதிக போட்டி ஏற்படுவது சாதாரணமாக நடைபெறுகிறது. அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சரிவர தெரிந்து எடுக்கப்படவில்லையென்றும், அவர்கள் அருகதையல்லவென்றும் பலவித குழப்பங்க



ஏகாம்பரநாதர் கோவில்—சிவகங்கை.

ளும் சச்சரவுகளும் ஏற்படுவது வழக்கமாக இருந்து வருகிறது வீதிகளெல்லாம் மிகவும் அகன்றவை. கப்பி போடப்பட்ட ரஸ் தாக்களின் மொத்த நீளம் 22 மைல், மண் ரஸ்தாக்களின் நீளம் 19 மைல். ரஸ்தாக்களில் உற்சவ தினங்களிலும் மற்றும் விசேஷ நாட்களிலும் மாத்திரம் தண்ணீர் தெளிக்கப்படுகிறது. யாத்திரை வரி மார்ச்சுமீ 1உயிலிருந்து ஜூலைமீ 31உ வரைக்கும் மூன்று வது வகுப்புப் பிரயாணிகளுக்கு ஒரு அணுவும், இரண்டாம் வகுப் புப் பிரயாணிகளுக்கு இரண்டணுவும், முதலாவது வகுப்புப் பிர யாணிகளுக்கு நான்கணுவும் வசூல் செய்யப்படுகின்றது. இதி லிருந்து கிடைத்த வருமானம் 1929-30 வரை ரூபா 7,144. முனி சிபல் வருமானம் வருஷத்தில் சுமார் ரூபா 2,19,000 கிடைக்கின்றது.

ஆலயங்கள்.

இந்நகரத்தின்கண் அநேக சிவாலயங்களும், வைஷ்ணவ ஆல யங்களும் இருந்தபோதிலும், அவைகளில் சிறந்து விளங்குபவை ஏகாம்பரேசுவரர் ஆலயமும், வரதராஜப்பெருமாள் என்று அழைக் கப்பெறும் தேவாதிராஜன் கோவிலும், காமாட்சியம்மன் கோவில், யதோத்காரி கோவில், கைலாசநாதர் கோவில், வைகுண்டப் பெரு மாள் கோவில், சித்ரகுப்தர் கோவில், கச்சபேஸ்வரர் கோவில், ஆகிய வைகளே. புராணீகர் கூற்றின்படி 10,000 லிங்கங்களும் ஆயிரங் கோவில்களும் இருப்பதாகக் கணக்கிடப்படினும், இப்போது இங் கிருப்பவை 108 சிவாலயங்களும் 18 விஷ்ணுவாலயங்களுமாம். ஆனால் ஒவ்வொரு தெருவிலும், வீதியிலும் குறைந்தது மூன்று அல்லது நான்கு கோவில்கள் உள்ளன. ஆகையினால் காஞ்சிபுரத் தைக் கோவில்கள் நிரம்பப்பெற்ற ஓர் ஊர் என்று கூறுவது மிகை யாகாது என்பது திண்ணம்.

ஏகாம்பரநாதர் கோவில்

இப்பூவுலகத்தின்கண் விசேஷித்தனவுகளென்று கருதப்படும் பஞ்சலிங்கங்களில் ஒன்ருகிய 'பிருதிவி லிங்கம்' இக்கோவிலில் உளது. அப்புராதின லிங்கம் சேதப்படாதபடி சுற்றிலும் பல கம்பிகள்

இணைக்கப்பட்டு மேலே ஓர் கவசத்தால் முழுவதும் மூடப்பட்டிருக்கின்றது. மற்றக்கோவில்களில் லிங்கங்களையும் மூலஸ்தானத்தையும் சுத்தி செய்வதுபோல் இங்கு செய்வதில்லை.

இதற்கு சராசரி ரூ. 3,000 வருஷவருமானம் சிறுணைபெருகல் என்னும் ஓர் சுரோத்திரிய கிராமத்திலிருந்து கிடைக்கிறது. சர்க்காரும் பிரதிவருஷம் தாங்கள் எடுத்துக்கொண்ட நிலங்களுக்காக ரூ. 280 கொடுக்கின்றனர். இதற்குள் இருக்கும் கம்பாநதி என்னும் திருக்குளமும் ஒருமாமரத்தின் கீழ் ஜோதிமயமாய் அவதரித்திருக்கும் சிவலிங்கத்தின் காட்சியும், திருக்கச்சி மயானமும் சிறந்தவையாகும்.

இவ்வாலயம் ஏற்பட்டதன் காரணத்தை விளக்கும் புராணக் கதைகள் பல உள: அவற்றுள் ஒன்றை ஈண்டு வரைவாம். முன்னொரு காலத்தில் பரமசிவன் ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழில்களை இயற்றியிருக்குங்காலை, அவரது அன்பிற்குகந்த மனைவியாகிய பார்வதிதேவி திடீரென்று அவருக்குப் பின்னாகவந்து அவரது கண்களை மூடிக்கொள்ள, உடனே பூலோகமே இருண்டுவிட்டதாம். அவர் தட்சணமே சாபங் கொடுத்து அவளையும் நிராகரித்தனராம். பிறகு பச்சாதாபப்பட்டு உடனே மீட்கும் வழியில்லாமையால், பூலோகஞ் சென்று, இவ்வாலயத்திலுள்ள கம்பா நதியின்கண் அமர்ந்து ஆறு மாதகாலம் தவம் புரியும்படிக் கட்டளையிட, அவளும் அவ்வண்ணமே செய்து முடிக்க, பின் அவளை அங்கீகரித்தனராம். இத்திருவிழாவானது பங்குனி மாதத்தில் 13 நாட்கள் நடைபெறுகின்றது பத்தாம் நாள் உற்சவத்தில் பார்வதி தன் பதியையடைந்த விதத்தைக் காணபிக்கும் நோக்கத்துடன் இவ்விரு விக்கிரகங்களையும் ஒன்றாய் ஓரிடத்தில் சேர்த்துவைக்கின்றனர். இதன் வாகனங்கள் தாமிரத்தால் செய்யப்பட்டு வெள்ளித்தகடு பொதியப் பெற்றவை. இவைகள் சுமார் ரூ 75,000 மதிப்பிடக்கூடியவை. இக்கோவிலின் நகைகளின் மதிப்பு ரூ. 1,03,000. இதுவுமன்றி இந்நகரத்திலும் சென்னையிலும் உள்ள கிடைகளின் மூலமாயும் வேறு பூஸ்திதிகளின் மூலமாயும் வருஷத்தில் ரூ. 3,000 கிடைக்கின்றது. ஆனால் இவ்வருமானம் செலவு அதிகமாயிருப்பதினால் போதவில்லை.

இது பல்லவ அரசர்களால் கட்டப்பட்டது. அதில் உயர்ந்த கோபுரம் 188 அடி உள்ளது. அதன் வெளிப்பிரகாரமானது ஏறக்

குறைய 25 ஏக்கரா விஸ்தீரணமுள்ளது. மூலஸ்தானத்துக்குச் சமீபத்தில் உள்ள மாமரத்தின் அடியில் இருந்துதான் பாாவதி தவம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. அவ்விதமான ஒருருவம் வெளிமண்டபத்தின் சுவற்றில் இருக்கிறது. இதன் கண்ணுள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களின் பிரதிமைகள் பூசிக்கப்படுவதுடன், அவர்களுக்கென்று ஒருநாள் தனி உற்சவம் நடைபெற்று அப்பிரதிமைகள் வெளியே ஊர்வலமாக இராஜவீதிகளில் எடுத்துச் செல்லப்படுகின்றன. இதை சீர்ப்படுத்தும் பொருட்டு நாட்டுக்கோட்டை நகரத்தார் மிகுந்த திரவியம் செலவழித்திருக்கின்றனர். சாதாரண உற்சவங்கள் வருஷத்தில் ஒன்பதுதரம் நடைபெறுகின்றன· ஒவ்வொன்றுக்கும் சுமார் ரூ. 9 செலவழிகின்றது. அது கோவில் பொக்கிஷத்திலிருந்து கொடுக்கப் படுகின்றது.

1845 வருஷம் தீவட்டிக் கொள்ளைக்காரர்களால் ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபாய்கள் மதிப்பிடக்கூடிய சொத்துக்களும், விக்கிரகங்களிலிருந்த நகைகளும் களவாடிச் செல்லப்பட்டன. தினமானம் ஆறுவேளை பூசை பலரின் நன்கொடையினால் நடைபெறுகிறது. அர்த்தசாம பூசைக்கு பச்சையப்ப முதலியாரின் தர்மத்திலிருந்து மாதம் ரூ. 25 கொடுக்கப் பெறுகின்றது.

பலகாலங்களில் ஏற்பட்ட யுத்தங்களாலும், உள்நாட்டுக் கலகக்காரராலும் ஐதரைப் போன்ற கொள்ளைக்காரராலும் சேதப்படுத்தப்பட்டும், பாழாக்கி விடப்பட்டும், தஞ்சம் புகுவோர்க்கு அபயஸ்தலமாகவும், சைனியங்கள் தங்கும்படியான அரண்களாகவும், வைத்தியசாலையாகவும், உபயோகப்பட்டு வந்திருக்கின்றது. பின்னும் ஐதர் ஆலியின் கலகத்தின்போது ஏற்பட்ட குண்டுகளின் அச்சடையாளங்கள் மதிற்சுவர்களில் இன்னும் காணப்படுகின்றன. அக்காலத்தில் வெளியூருக்கு எடுத்துச் செல்லப்பட்ட விக்கிரகம் செல்லம் பட்டு என்னும் பிராமணன் ஒருவனால் திரும்பவும் கொண்டுவரப்பட்டு யதாஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள ஆலயங்களில் மிக்க புராதீனமாயுள்ளது, இதுவும் கைலாசநாதர் கோவிலுமாம். இவ்வாலயத்தின் கட்டடங்களை சரிவா உற்று நோக்குங்கால், இது ஒரு காலத்தில் ஒரு சிறு கோவிலாக இருந்து நாளடைவில் விஜயநகரமன்னர் ஆட்சியின் காலத்திலும், சோழமன்னர்களின் அர

சாட்சியின் போதும், பல கோபுரங்களும் மதிற் சுவர்களும் எழுப்பப் பெற்று, தற்சமயம் இருக்கும்படியான நிலைமையை யடைந்ததாக ஊகிக்கலாம். ஓர் சிலாசாசனத்தில் கி.பி.1509 வருஷம் விஜயநகர மன்னனாகிய கிருஷ்ணதேவராயனால் வெளிப்பிரகாரத்திலுள்ள உன்னத கோபுரமானது கட்டப்பட்டதாகக் காணப்படுகிறது. அறிஞர் பலர் இது சிற்பசாஸ்திரத்துக்கு ஒத்ததாகக் கட்டப்படவில்லை என்பதற்குப் பல ஆதாரங்களை எடுத்துக் கூறுகின்றனர். முகப்பிலுள்ள ஆயிரக்கால் மண்டபமானது ஒருகாலத்தில் சிறப்புற்றிருந்து இப்பொழுது பாழடைந்து கிடக்கின்றது.

பங்குனியில் நடைபெறும் உற்சவத்திற்கு அநேக கனவான்கள் உபயமாகக் கொடுக்கும் பணத்திலிருந்தும் சிலவேளைகளில் கோவில் பொக்கிஷத்திலிருந்தும், செலவு செய்யப் படுகிறது. தேசாந்திரிகளில் யாதொருவகுப்பு துவேஷமின்றி தினமானம் 25 பேர்களுக்கு அன்னம் அளிக்கப்படுகின்றது. ஆனால் ஆதிதிராவிடர்களுக்கு மாத்திரம் கிடையாது. ஸர். ஸி. பி. இராமசாமி ஐயரின் தருமத்திலிருந்து உற்சவத்தில் வேதபாராயணம் செய்யும் பிராமணர்களுக்கு மாத்திரம் அன்னம் அளிக்கப்படுகின்றது.

காமாட்சியம்மன் கோவில்.

சிவகஞ்சியில் முக்கியமானவைகளாகக் கருதப்படுபவைகளில் இவ்வம்மன கோவிலுமொன்றாகும். பொதுவாக அம்மன்களைப்பற்றிக் கூறும்போது, "கஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரைமீனாட்சி" என்று கூறுவதைக் கேட்கின்றோம். காஞ்சியில் சிறப்புற்ற பெண் தெய்வமாகிய இவ்வம்மனுடைய வாலாற்றைப் பற்றி ஆராய்வோம். காமம் + ஆட்சி = விருப்பத்தை யுண்டாக்கும் அல்லது வசீகரிக்குந் தன்மையுடைய விழிகளையுடையவள் என்பதுபொருந்தும். துவைதம் அத்வைதம் ஆகிய இருபிரிவினரும் இவ்வாலயத்தைப் பெரிதும் கொண்டாடி வருகின்றனர். லௌகீக இன்ப மடைதற்கும், வாழ்வில் நன்னிலை யெய்தற்கும் உபகரிக்கக் கூடிய பராசக்தியாக தொழப் பெறுகின்றனள்.

இதற்காக செலவிடப்படும் தொகையில் சர்க்கார் வருஷந்தோறும் கொடுக்கின்ற தொகையும் இதற்கென்று விடப்பட்டுள்ள சுரோத்திரிய கிராமத்திலிருந்து வருஷாவாரி கிடைக்கும் தொகையும்



காமாட்சியம்மன் கோவில்.



கைலாச நாதர் கோவில்.

சேர்ந்து ரூ. 2,832 ஆகிறது. இங்கு ஆதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகமானது சுவர்ணத்தால் செய்யப்பட்டது. அது ஐதர் ஆலியின் கலகத்தின்போது தஞ்சாவூருக்குக் கொண்டு போகப்பட்டு அங்கேயே அவ்வாசனின் அரண்மனையில் இருக்கின்றது. அதற்குப் பிரதியாக வேறொரு விக்கிரகம் செய்யப்பட்டு வேறு பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. காஞ்சியிலுள்ள இதர ஆலயங்களெல்லாம் இவ்வாலயத்தை நோக்கிய வண்ணமே அமைக்கப்பட்டுள்ளனவென்று பலர் கூறுகின்றனர். காமாட்சியம்மனைப்பற்றி ஓர் ஐதீகம் உள்ளது. அதாவது இவ்வம்மனானது ஒரு காலத்தில் மிகவும் குரூரமுள்ளதாக இருந்ததென்றும், அது நள்ளிரவில் வெளிப்போந்து எதிர்ப்பட்ட யாவரையும் இரக்கமின்றி மடிவிப்பதையே தன் தொழிலாகக் கொண்டிருந்ததாகவும், இரத்த பலி ஏற்பதில் மிகவும் அவாவுற்றிருந்ததென்றும், ஆதிசங்கரர் இங்கு விஜயஞ்செய்திருந்த காலை, இது விஷயத்தைக் கேள்விப்பட்டு மனம் வருந்தி, தமது மந்திர சக்தியால் அவளுடைய உக்கிரத்தைத் தணித்து, ஜெயித்தாராம். பின்பு அவர் வேண்டுகோளின்படி அம்மன் தன்னிருப்பிடத்தை விட்டு வெளியே புறப்படுவதற்கு அவரது ஆக்ஞையின்றி இடம் பெயர்வதில்லையென்று வாக்குறுதி கொடுத்தனளாம். ஆகையினால் சங்கரரைப்போன்று ஓர் பிரதிமை செய்யப்பட்டு, பூசிக்கப்படுகிறது. அக்காரணம் பற்றியே காமகோடி பீடாதிபதியாகிய தற்கால சங்கரரும் தமது பரிவாரங்களோடு வந்து அங்கு தங்குகின்றார். விஜயநகரத்து அரசர்களில் ஒருவனாகிய அச்சுதராயனால் இக்கோவிலுக்கென்று 8 கிராமங்கள் தானமாகக் கொடுக்கப் பெற்றதாகக் கூறப்படுகிறது. இங்குள்ள நகைகள் மிகவும் விலையுயர்ந்தவைகள் அல்ல.

கைலாச நாதர் ஆலயம்.

இது காஞ்சிபுரத்தைச்சேர்ந்த சாலபோகம் என்னும் கிராமத்தில் இருக்கின்றது. புராதன சிற்ப சாஸ்திரங்களை ஆராயும் நிபுணரீற்பலர் இதன் சிற்ப விநோதங்களின் திறமையையும், கட்டிடமானது புத்த சமயக் கோவில்களின் மாதிரியைத் தழுவி நிருமிக்கப் பெற்றிருப்பதாகவும், இங்கு புத்த சமயம் பரவியிருந்ததென்பதைக் காட்டக்கூடிய ஓர் ஆதாரமெனவும் பின்னும் பலவாறாய் வியந்துரைக்கின்றனர்.

இது பல்லவ அரசர்களில் ஒருவனுகிய இராஜசிம்மனுல் கட்டப் பட்டது. அவன் தேவருலகமாகிய கைலாசத்தை நிகர்த்த ஓர் ஆல யத்தை கி.பி. 570-ஆம் ஆண்டில் கட்டினுர் என்று ஓர் சாசனம் கூறு கின்றது. அதில் புராதன பாஷை எழுத்துக்கள் வெட்டப்பட் டிருக்கின்றன. அவைகளிலிருந்து பல்லவர்களின் வம்சாவளி பிர மனிலிருந்து ஆரம்பித்துப் பின் அங்கிரசர், பாரத்வாஜர், துரோணர் முதலியவர்களின் பின்னடியாராகவும், துரோணரின் புத்திரன் அசு வத்தாமாவுக்குப் பிறந்தவன்தான் பல்லவன் என்றும், அவர்களு டைய வம்சத்தை மிகவும் புகழ்ந்து பேசியிருக்கின்றது. ஏனெனில் அவர் பிராமணர்க்கு வேண்டியமட்டும் தானங்கள் வழங்கினதினுலே தங்களின் நன்றிக்கொரு குறிப்பாக, பல்லவர்கள் கலியுகத்தின் மதத்தையடக்கினவர், சத்தியமும், கெம்பீரமும் உடையவர். பெரி யோரை வழிபடுவது தங்கடமையென நினைப்பவர். போர்த்தொழி லில் தேர்ச்சி பெற்றவர். கிருஷ்ணனைப்போல் பெண்களைக் களிப் புறச் செய்பவரும், பரிபாலிப்பவருமா யிருந்தனரென்றும், பலவா ருக மட்டுக்கு மிஞ்சி புகழ்ந்திருக்கின்றது.

இக்கோவிலின்கண் அர்த்தநாரீசுவர பிம்பம் ஒன்று இருக்கிறது. பராசக்தியின் கையில் வீணை வைத்திருக்கும் பாவனையாகவும், சிவன் ரிஷபவாகனுரூடராக இருக்கும் பாவனையாகவும் செய்யப்பட் டிருக்கின்றது.

சாதாரணமாக திராவிட மாதிரியையேயன்றி, சோழபாண்டிய ரின் மாதிரியொன்றும், பல்லவ அரசர்களின் மாதிரியொன்றுமாக இருவிதமான வேறுபாடுள்ள சிற்ப சாஸ்திரங்கள் உள்ள கோவில் கள் பல உள. அவைகளில் பல்லவ மாதிரியை அனுசரித்த சிற்ப சாஸ்திரத்துக்கு ஒத்தவிதமாய் இவ்வாலயம் கட்டப்பட்டிருக்கின் றது. அவர்கள் கட்டிய கோவில்களில் மூலஸ்தானத்துக்கு மே லுள்ள கோபுரமானது சந்நிதி வாயிலுள்ள கோபுரத்தைவிட பெரிய தாகவும், புத்தமத மடங்களைப்போன்று, கோபுரம் வட்டாகாரமாக வும், பல மாடங்களோடு கூடிய அடுக்கு மெத்தைகள் ஒன்றின் மேலொன்றுள்ளவைகளாகக் கட்டப்பட்டும் மிகவும்சிறந்து விளங்கு கின்றன.



வைகுண்ட பெருமாள் கோவில்.

வித்வசிரோன்மணியாகிய பர்கெஸ் (*Dr. Burgess*) என்பவர், தாம் இதைக்கண்டதைப்பற்றி சில விஷயங்கள் கூறியுள்ளார். "அதன் மதிற்சுவற்றின்மேல் 24 யாளிகள் இருக்கின்றன. உள்ளே கெபிகள் போன்ற சிறு பீடங்கள் தொண்ணூறு உள்ளன. அவைகளின்கீழ தரைமட்டத்திலிருந்து சுமார் $2\frac{1}{2}$ அடி உயரத்துக்கு மேல், சுற்றிலும் சோழ கிரந்த எழுத்துக்கள் வரையப்பட்டிருக்கின்றன. மூலஸ்தானத்துக்கு தென்கிழக்கு மூலையில் வாயிலின் இடபாரிசத்தில் மகாபலிபுரத்திலுள்ள இரதங்களில் காணப்படும் எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. வெளிப்புறத்திலுள்ள சிறு மாடங்களில் புராதன தமிழ்ப்பாஷை எழுத்துக்கள் காணப்படுகின்றன. உட்பிரகாரத்திலும், தேவ நகரி லிபியில் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. மண்டபத்தின் சுவற்றின்கண் சித்திரவேலை செய்துள்ள விசித்திரமான ஓர் பலகணி உள்ளது. இது பலகாலத்தில் பழுது பார்க்கப்பட்டும், விமானமானது சிறிது மாற்றிக்கட்டப்பட்டதாகவும் காணப்படுகிறது." இது மிக்க புராதீனமானதும், புத்த சமயக் கோவில்களை மாதிரியாகக்கொண்டு கட்டப்பட்டதாகும். புராதன சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் விசேஷித்தவைகள் என்றும் தெரியவருகின்றது.

வைகுண்டப் பெருமாள் கோவில்.

இக்கோவிலும் புத்த சமயக் கோவில்களின் சிற்ப சாஸ்திரத்துக் கொத்தவாறு பல அடுக்குகளோடு கூடிய கோபுரமாக விளங்குகிறது. இக்கோவிலைச் சுற்றி பல கல்வெட்டு சாசனங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு அடுக்கு மெத்தையிலும் விஷ்ணுவின் உருவம் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. சரித்திர ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படக்கூடிய பண்டைய காலத்துப் பழக்க வழக்கங்கள், அரசனைத் தெரிந்து எடுக்கும் விதிகள் முதலியவை கூறப்பட்டிருக்கின்றன. இதைக்கட்டியது பரமேசுரவர்மன் என்று முன்னமே கூறப்பட்டுள்ளது. வைஷ்ணவ ஆழ்வார்களில் சிறந்தவராகிய திருமங்கையாழ்வார் இதைக்குறித்து அநேக பாடல்களும் பாடியிருக்கிறார். இதற்கு விண்ணகரம் என்று ஒரு பெயரும் உள்ளது என்பதை அவர் செய்யுட்களிலிருந்து அறியலாம்.

சித்ரகுப்தர் கோவில்.

சித்ரகுப்தருக்காக தென்னிந்தியாவில் வேறு எங்கும் கோவில் கட்டப்படவில்லை. ஆனால், வட இந்தியாவில் அயோத்யா, காசி, உஜ்ஜயினி முதலிய இடங்களில் இருப்பதாக ஓர் ஆசிரியர் கூறுகின்றனர். இது துலாபார மண்டபம் கனகரா்யர் என்பவரால் சென்னைய சோழன் அரசாட்சியின்போது கட்டப்பட்டது. இது நெல்லுக்காரத் தெருவில் இருக்கின்றது. ஒரு உற்சவ விக்கிரகம் 11—2—1911ல் ரூபா 500 மதிப்புள்ளது, தாமிரத்தால் சித்திரகுப்தரும் கர்னகி தேவியோடு வீற்றிருக்கும் பாவனையாய் செய்யப்பட்டு, பூமியை வெட்டினபோது அடியிலிருந்து கிடைத்தது. இதை ஐதருக்குப்பயந்து அக்காலத்தில் புதைத்து வைக்கப்பட்டதென்று எண்ணுகின்றனர். வருஷந்தோறும் சித்திராபௌர்ணமியன்று மகாபிஷேகமும், திருக்கலியாணமும் நடைபெறுகின்றது. கருணீகர், அல்லது கணக்கப்பிள்ளை வம்சத்தார், சித்திர குப்த வம்சத்திலிருந்து தோன்றியதாகக் கூறுகின்றனர். யமதர்மராஜனின் பட்டணத்திலிருந்து மானிடர் செய்யும் நன்மையான காரியங்களையும், தீமையான தொழில்களையும் கணக்கெழுதுவது தொழிலானபடியால், இவ்விக்கிரகம் வலது கையில் எழுத்தாணியும் இடது கையில் ஓலைச்சுவடியும் வைத்திருப்பதைப் போன்று செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கென்று அவ்வம்சத்தாரில் பலர் கொடுத்த பூதானங்களைக்கொண்டு இது நிர்வகிக்கப்படுகின்றது.

கச்சபேஸ்வரர் கோவில்.

இதுவும் சிவகாஞ்சியில் இராஜவீதியும் நெல்லுக்காரத் தெருவும் ஒன்று சேருமிடத்தில் இருக்கின்றது. இது ஒரு சிவன் கோவில். புராதன கால எழுத்துக்களும் சித்திரங்களும் உண்டு. துவஜஸ்தம்பத்துக்குப் பின்னால், வெளிப்பிரகாரத்திலுள்ள உயர்ந்த மதிற்சுவற்றின் சமீபத்திலும், சந்நிதிக்கருகாமையிலும் இவ்வெழுத்துக்கள் காணப்படுகின்றன. சில எழுத்துக்கள் தலைகீழாய்க்காணப்படுகின்றன. பல்லவ அரசர்களுடைய மாதிரியின்படி அடியில் யாளி முகமுள்ள பல தூண்கள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் மிகச்சிறந்தது. வாயிற்படிக் கோபுரத்தின் சமீபத்தில் ஸ்நானக் கட்டிடத்திலும் இருமருங்கிலும் இருக்கின்றன. இங்கே பல்லவ இராஜ்யத்தின் காடுகளிலுள்ள குறும்பர் என்னும் வகுப்பைச்

வரதராஜ பெருமாள் கோவில்.

சேர்ந்த மனிதர்களின் உருவங்கள், நீண்ட தொப்பிகளும், குறுகிய வாளும், தோளுக்குக் குறுக்கே சுரக்குடுக்கைகளும், தொங்கவிட்டிருக்கும் பாவனையாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பார்வைக்கு மிகவும் விநோதமாகக் காணப்படுகின்றன.

எல்லாவற்றிலும் விசேஷித்தது என்னவெனில் விஷ்ணு கூர்மாவதாரத்தோடு சிவனைத்தொழுவது போன்ற விக்கிரகம் ஒன்று இருக்கிறது. குறும்பர் என்னும் ஜாதியார் ஆதியில் காஞ்சிக்குச் சமீபத்தில் வசித்ததாகவும், குலோத்துங்க சோழன் மகனை ஆதொண்டைச் சக்ரவர்த்தியினுல் முறியடிக்கப்பட்டு, காஞ்சிமா நகரத்தில் குடியேற்றப்பட்டதாகவும், அப்பொழுதுதான் காஞ்சிநகரம் நிருமிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

வரதராஜப் பெருமாள் கோவில்.

விஷ்ணு கஞ்சி அல்லது சின்னகாஞ்சிபுரம் என்று சொல்லப்படும் இடத்திலுள்ள மிகவும் சிறந்த ஆலயம் வரதராஜப் பெருமாள் ஆலயமே.

இங்கு இவ்வாலயம் ஏற்பட்டதற்குக் காரணம் பலர் பலவாறுகக் கூறுகின்றனர். ஆனுல், இவ்வூரில் கூறப்படும் காரணம் என்னவெனில், பதினோராம் நூற்றாண்டில் இக்காஞ்சியின் அதிபதியாயிருந்த கோபாலராவ் என்பவர், 'தமது மனைவி மலடியாயிருந்ததினிமித்தம், புத்திர வாஞ்சையினுல் அநேக தெய்வங்களிடம் பிரார்த்தனை செய்தும் ஒன்றும் பலிதமாகாமல் போக, ஒரு நண்பரின் வற்புறுத்துதலின் பேரில் தான் வீரசைவனுயிருந்தபோதிலும், தனக்கு ஒரு புத்திரன் ஜெனித்தால், வரதராஜப்பெருமாளுக்கு ஒரு ஆலயம் கட்டுவதாகப் பிரதிக்ஞை செய்து கொண்டனராம்.

அவரது விருப்பத்திற்கேற்றவாறு, புத்திரப் பேறுண்டானதினிமித்தம், ஒரு சைவக்கோவிலை யிடித்து அதன் தளவாடங்களைக் கொண்டு இவ்வாலயத்தைக் கட்டி முடித்ததாகக் கூறுகின்றனர். காலத்தை நோக்கின் இது உண்மையாயிருக்கலாமென்று நம்ப ஏதுவுண்டு. ஏனெனில் இராமாநுஜரும், இக்காலத்திலேயே தமது சமயப் பிரசாரம் செய்து வந்தபடியினுல், இக்கூற்று உண்மையெனவிளம்பல் மிகையாகாது.

இவ்வாலயமானது சுமார் 1,200 அடி நீளமும் 800 அடி அகலமும் உள்ளது. ஏகாம்பரநாதர் கோவிலையன்றி இவ்வளவு பெரிதான கோவில் வேறொன்றுமிங்கில்லை. விஜயநகரத்தரசர்களில் ஒருவன் இங்கு தன் குடும்ப சகிதமாய் வந்து வரதராஜரைத் தரிசித்துப் போனதாகவும், பொன், வெள்ளி முதலியவற்றால் செய்யப்பட்ட பல நகைகளேயன்றி, இக்கோவிலின் நிர்வாகத்துக்கென்று 17 கிராமங்களையும் சர்வமானியமாகக் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது. அச்சுத இராயன் மகா பூத கட் தானம் அல்லது ஸ்தூல பரதானமென்றும் சொல்லப்படும் (தன் எடைக்கு ஏற்ற அளவு பொன்னை நிறுத்து) தானம் செய்ததாகக் கூறப்படுகின்றது.

இக்கோவிலின் முகப்பிலுள்ள நூற்றுக்கால் மண்டபம் விசேஷித்தது. அதில் விஷ்ணுவின் பல அவதாரங்களும், மற்றும் புராண சம்பந்தமான சித்திரங்களும், சித்திரிக்கப்பட்டுள்ளன. ஒரே கல்லிலிருந்து கோர்வையாக செய்யப்பட்ட விசித்திர சங்கிலித் தொடர்கள், அம்மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் தொங்குகின்றன.

ஒரு கல்வெட்டு சாசனத்தில் கீழ்க்கண்ட விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. "மகமதியர் இவ்வூரைச் சூறையாடின காலத்தில், இங்குள்ள விக்கிரகங்களைப் பாடைகளின் மீது வைத்து, பிணங்களைப் போல் பிரேத அலங்காரம் செய்து, ஊருக்கு வெளியில் கொண்டு போய், பின் தஞ்சாவூருக்கும், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த உடையார் பாளைய ஜமீனுக்கும் கொண்டு போனதாகவும், அந்த ஜமீன்தார் சமாதானம் நிலவுங்காலை அவைகளைத் திருப்பியனுப்ப மறுத்ததாகவும், பின் கி. பி. 1799 ஆண்டு இங்கு கொணரப்பட்டதாகவும் தெரியவருகின்றது. அதன் ஞாபகார்த்தமாக இப்போதும் உடையார் பாளைய உற்சவம் என்று ஒரு விழாவும் கொண்டாடப் பெறுகின்றது.

இக்கோவில் விசிஷ்டாத்வைதம் என்னும் கோட்பாடுகளின் மூலஸ்தானமாய் விளங்குகின்றது. இது பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்பதற்கு, ஓர் ஆதாரம் என்னவெனில், ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நேர்ந்த யுத்தத்தின்போது இவ்வாலயத்தின் திருப்பணி வேலை பத்து ஆண்டுகளாகத் தடைப்பட்டு நின்றது. கி. பி. 1515 வருஷம் விஜயநகரத்தரசனாகிய

கிருஷ்ண தேவராயன் இங்கு விஜயஞ்செய்து 'புண்யகோடி விமானத்தில்' சித்திர வேலைகள் செய்து, புதுப்பித்ததாகத் தெரியவருகின்றது.

இங்கு பெருமாள் அத்திகிரி யென்று சொல்லப்பட்ட ஓர் குன்றின் பேரில் எழுந்தருளியிருக்கின்றார். இக்கோவிலுக்குத் திரண்ட ஆஸ்தியுண்டென்றும், அதற்கேற்ப செலவுகள் உண்டென்றும் கூறுகின்றனர். பிரம்மா ஒரு காலத்தில் அசுவமேதயாகம் செய்ததை உறுதிப்படுத்தும்பொருட்டு ஒரு யாகசாலை மண்டபமுமிருக்கின்றது. இங்கு செய்யப்படும் ஓர் யாகமானது பிறிதோரிடத்தில் செய்யப்படும் ஆயிரம் யாகங்களுக்குச் சமனாகும் என்று புராணங்கள் கூறுகின்றன.

இதன்பொருட்டு நடைபெறும் உற்சவமானது பிரம்மோத்சவம் என்று சொல்லப்படும். அது வருடந்தோறும் வைகாசி மாதம் பத்துநாட்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 'ஜனம் பெருத்தவர் வரதராஜர்' என்று பாமர மக்கள் கழறுகின்றபடி, இவ்வுற்சவத்தின் பொருட்டு ஆயிரமாயிரமான ஜனங்கள் பல் வேறு நாடுகளிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், தரிசனத்திற்காக வருகின்றனர். இங்கு நாடோறும் ஏதாவது ஒரு கோவிலில் உற்சவம் நடைபெறுவது வழக்கமாயினும், எல்லாவற்றிலும் மிகச்சிறந்தது இவ்விழாவே.

இவ்விழாவின் ஏழாம் நாளில் இரதோற்சவம் சிறப்பாக நடைபெறும். வைகாசி மாதம் பௌர்ணமியன்று கருடசேவை என்று சொல்லப்படும், 'கருடோற்சவம்' நடைபெறும். அத்திருவிழா மிகவும் விசேஷித்தது. விஷ்ணுவின் வாகனமாகிய கருடன் அன்று அங்குவந்து வரதரைத் தரிசித்துப் போவதாகக் கூறப்படுகின்றது. ஆறும் நாள் உற்சவத்தில் வாகனரூடராக சிவகஞ்சி சென்று தனது மைத்துனனாகிய ஏகாம்பாரைப் பரிகசிக்கும் வண்ணம் முதலில் பிரதட்சணமாகவும், பிறகு அப்பிரதட்சணமாகவும் வலம்வந்து, பின் தம்மிருப்பிடம் ஏகுவது வழக்கமாக நடைபெற்று வருகின்றது.

இக்கோவிலின் வருமானம் இதற்கென்று மானியமாக விடப்பட்ட ஆறு கிராமங்களிலிருந்து வருடந்தோறும் ரூபா 13,000மும்,

சர்க்கார் கொடை ரூபா 9,000 மும் தோட்டம், வீடு, முதலியவைக ளின் மூலமாய் வருமானம் ரூபா 3,000மும் பின்னும் பல கனவான் களின் பொருளுதவியைக் கொண்டும் நிர்வகிக்கப்படுகிறது. தின மானம் நான்கு வேளை பூஜை நடைபெறுகின்றது. இது கோவில் நிதியிலிருந்து செலவழிக்கப்படுகிறது. சமீபத்தில் ஓர் மார்வாரி வட இந்தியாவிலிருந்து வந்து சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரையில் செலவழித்து பழுது பார்த்து வருகின்றார். தாதாசாரியர்கள் பாம்பரை ஊழியஞ்செய்து வந்தபடியால், அவர்கள்தான் தகுதி யுள்ளவர்கள் என்று கச்சேரியின் மூலமாய் ஊர்ஜிதமாகிவிட்டது. அடிக்கடி அவர்களுக்குள் சண்டைகள் ஏற்படுவதினால் சர்க்காரார் ஸி. ஸோமசுந்திரம் ஐயர் என்பவரை ரிஸீவராக நியமனம் செய்தி ருக்கின்றனர். இதற்கு இருந்த கடன்கள் அநேகம் இந்த ரிஸீவ ரின் சாமர்த்தியத்தினாலும், திறமையினாலும், அடைபட்டு விட்டன. திருப்பணியும், பூஜைகளும், கிரமமாக நடத்தப் பெறுகின்றன. இவரே ஏகாம்பரநாதர் கோவிலுக்கும் டிரஸ்டியாக இருக்கின்றனர்.

புராதீனமான இக்கோவிலின் பழைய கால சொத்துக்களின் மதிப்பு சுமார் ஐந்து லட்சம் ரூபாய்களாகும். கிளைவ் ரூபா 3,682 மதிப்புள்ள ஒரு மகர கண்டிகையைப் பரிசளித்ததாகக் கூறுகின்ற னர். காரோ என்னும் ஓர் கலெக்டரும் ரூபா 371 மதிப்புள்ள ஒரு சந்திரஹாரம் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. வெங்கடாத்ரி என்னும் பிராமண யாசகன் ஒருவன் நாடோறும் குறைந்தது ரூ 10 வசூல்செய்யாமல் சாப்பிடுவதில்லை என்னும் விரதம்பூண்டு ஏறக் குறைய ரூபா 24,000 வசூலித்து பெருமாளுக்கும் தாயாருக்கும் முடி களும், பல ஆபரணங்களும் செய்வித்ததாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள வாகனங்கள் பெரும்பாலும் முலாம் பூசப்பட்டவைகளா கும். இவைகளின் மதிப்பு சுமார் ரூபா 70,000 ஆகிறது. இந்த ஜில்லாவின் கலெக்டராயிருந்த பிளேஸ் என்னும் ஐரோப்பியர் சுமார் ரூபா 3,032 பெறும்படியான நன்கொடைகள் கொடுத்ததாகக் கூறப் படுகிறது.

இங்கு நடைபெறும் உற்சவ நாட்களில் வடகலை, தென்கலை என்று சொல்லப்படும் இருபிரிவாருக்கும் பல தர்க்கங்கள் ஏற்பட்டு முடிவில் அடிபிடியாகி, போலீசார் பாதுகாவல் உண்டாகியிருக்கும் படியான நிர்ப்பந்தம் வருடா வருடம் ஏற்படுவதால் சாதாரணமாக



வரதராஜ பெருமாள் கோவில்—திருக்குளம்.

போலீஸ் படைகள் கூட வருவது சகஜமாகி விட்டது. வடகலையார் சமஸ்கிருத வேதத்தையும், தென்கலையார் தமிழ் நூற்களான நாலாயிரப் பிரபந்தத்தையும் விசேஷித்துப் பாராட்டுகின்றனர். வடகலையார் "மர்க்கட நியாயத்தையும்," தென்கலையார் "மார்ஜால நியாயத்தையும்" போற்றி தங்கடங்கள் கொள்கைகளே சிரேஷ்டமானவையென்று பெருமை பாராட்டுகின்றனர்.

யதோத்காரி கோவில்.

இதுவும் விஷ்ணு கஞ்சியில் இருக்கின்றது. இதற்கு "சொல்லிய வண்ணமே செய்த பெருமாள்" என்று காரணப்பெயர் அமைந்ததாகக் கூறுவர்.

இதனோடு சம்பந்தப்படுத்தப்பட்ட வரலாறு என்னவெனில், முற்கூறியுள்ளபடி பிரமாவானவர் தனது மனைவியாகிய சரஸ்வதியின்றி ஓர் யாகம் செய்தமையால், அவள் கோபங்கொண்டு, அந்த யாகத்தை அழிக்கும் நோக்கத்துடன் ஓர் நதி யுருவெடுத்து வர, பிரம்மாவானவர் மிகவும் பயந்து, வரதரைத்தனக்கு உதவி செய்யும்படி கெஞ்ச, அவர் நிர்வாண கோலமாக அங்கு விளங்க, அவள் வெட்கி தலை குனிந்தனளாம். இவ்விடத்தில் வேகா சேது என்னும் இக்கோவில் கட்டப்பட்டதாகப் பலர் கூறுகின்றனர். வேகவதியாற்றின் உற்பத்தியும் இது காரணம்பற்றியே தோன்றியது என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் அந்நதியானது பாலாற்றின் ஒரு கிளை நதியென்பதை பெரும்பான்மையான மக்கள் நன்கறிவர். வரதர் நிர்வாணக் காட்சியளித்ததை மெய்ப்பிக்கும் பொருட்டு, யதோத்காரி கோவிலின் வாயிலிலுள்ள ஓர் நிர்வாண சிலையைக் குறிப்பிடுகின்றனர். ஆனால், அது ஜெயினருடைய விக்கிரகங்களில் ஒன்றெனப் பலர் புகல்கின்றனர்.

இவ்வாலயங்களே யன்றி, அஷ்டபுஜம், விளக்கொளிப்பெருமாள் முதலியவைகள் விஷ்ணு கஞ்சியிலும், பச்சை வண்ணர், பவழ வண்ணர், உலகளந்த பெருமாள், பாண்டவப் பெருமாள் முதலிய பெருமாள் கோவில்கள் சிவகஞ்சியிலும், குமரகோஷ்டம் என்னும் சுப்பிரமணியர் கோவில் சிவகஞ்சியிலும், ஓணகாந்தேசுவரர் கோவில் பஞ்சுப்பேட்டையிலும், ஐராவதேச்சுவரர் கோவிலும்

திருக்காலிமேடு என்னும் இடத்தில் திருக்காரைக் காட்டார் கோவி லும் இருக்கின்றன.

ஜைன ஆலயம்.

இது பிள்ளைப்பாளையத்திற்கு சமீபத்தில் வேகவதி யாற்றின் அக்கரையிலுள்ள திருப்பருத்திக்குன்றம் என்னும் ஒரு சிறுகிராமத்தி லிருக்கின்றது. இது அழகிய பருத்திக்குன்றுகள் நிறையப்பெற்ற ஊர் என்னும் காரணப் பெயர் கொண்டியங்குகின்றது. இதைச் சுற்றிலும் ஒருகாலத்தில் பருத்தி பயிரிடப்பட்டு வந்தமையால், இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று அனுமானிக்கின்றனர். இங்கு குடிமியிருக்கும் பல வீடுகளின் மத்தியில் முக்கியமான இரண்டு ஜெயினக் கோவில்கள் உள.

மகாவீரவர்த்தமானசுவாமி கோவில்,

இக்கோவிலானது இகம், பரம், பாதாளமாகிய மூவுலகை யாளும் முதல்வன் பெயர் கொண்ட திரிலோகானந்த சுவாமியின் பெயரால் நிறுவப் பெற்றிருக்கின்றது. இதன் சிற்ப சாஸ் திரத்தை உற்று நோக்கின், பல சோழ அரசர்களாலும், விஜயநக ரத்து அரசர்களாலும், நிர்மாணிக்கப்பட்டதென்பதற்குப் போதிய ஆதாரங்களும், முகப்பில் உள்ளவிதானத்தில் பொறித்திருக்கும் வர்ணந் தீட்டிய சித்திரங்களும் இன்றளவும் அழிந்து படாமல் துல் லியமாய் விளங்குவதும் போதியவையாகும்.

விஜயநகரத்து அரசனாகிய இரண்டாவது புக்கராஜனுடைய தளகர்த்தனாகிய இருகப்பர் அங்கு வசித்திருந்த ஐந்து சந்நியாசி களில் தமது குருவாகிய புஷ்பசேனரின் வேண்டுகோளின்படி கோபுரத்தையும் சந்நிதி வாயிலையும் கட்டி முடித்ததாகக் கூறப்படு கின்றது. மூன்றாவது குலோத்துங்க சோழனுக்குப் பின் கி. பி. 1216ம் ஆண்டு, சிம்மாசனமேறின மூன்றாவது இராஜ ராஜனுடைய் அரசாட்சிக்குட்பட்ட குறுநில மன்னராகிய கோப்பேரி சிங்கனென் னும் மாறு பெயர் கொண்ட அழகையபல்லவனால் சுற்றிலுமுள்ள மதிற் சுவர்கள் எழுப்பப்பட்டன.

சந்நிதிக்கெதிரிலும், சுற்றுப்புறத்திலும் பல தூண்கள் உள்ள மண்டபமானது இருகப்பரால் கி. பி. 1387—1388-ல் சபா மண்டபமாக உபயோகிக்கும்படி நிர்மாணிக்கப்பட்டது.

இதன் மத்தியில் சலவைக் கல்லால் செய்யப்பட்ட வர்த்தமான சுவாமியின் விக்கிரகம் ஒன்று மிகவும் அழகாய் விளங்குகின்றது. இதற்குச் சமீபத்தில் 23-வது பருவ நாதருடைய விக்கிரகம் இருக்கின்றது.

ஜெயின விக்கிரகம் இருக்கும் ஸ்தானத்துக்குப் பின்னுள்ள கோராமாத்தின் அடியில் மல்லிசான முனிவரின் சீஷர்களாகிய வாமனுசாரியார், புஷ்பசேனர் ஆகிய இருவரும் பூசிக்கும்பொழுது ஜெயின தேவதை பிரத்தியட்சமாகியதால், அவ்விடத்திலேயே இவ்வாலயம் கட்டப்பட்டதாகவும், மற்றும் குருக்கள் தங்கியிருக்கும்படி அம்மாத்தின் கீழே இருபீடம் அமைத்ததாகவும், இக்கோவிலின் நிர்வாகத்துக்கென்று, திருப்பருத்திக் குன்றத்துக்குச் சமீபத்தில் 2,000 குழி நிலம் சர்வ மானியமாய் விடப்பட்டிருக்கிறதென்றும், ஓர் சாசனத்திலிருந்து அறியக் கிடக்கின்றது.

வடமேற்கு மூலையில் முதல் தீர்த்தங்கராகிய ரிஷபதேவருடைய ஸ்தானம் சாந்தி மண்டபம் என்று சொல்லப்படும் மண்டபத்தின் மத்தியிலிருக்கின்றது.

வடகிழக்கில் சாந்தி மண்டபத்தின் தொடர்ச்சியாக ஐந்து மாடங்களுள்ள ஒரு கோவில் இருக்கின்றது. அதற்கு முனிவாசமென்று பெயர். இங்கு ஐந்து முனிவர்கள் வசித்து வந்ததாகவும், இவைகள் அவர்களுடைய இருப்பிடமாக இருந்தனவென்றும் ஓர் பாரம்பரியமுண்டு.

சந்நிதிக்கெதிரில் உள்ள தாழ்வாரமும், முனிவாசமும், சாந்தி மண்டபமும், கி. பி. 985-க்கும் 1215-க்கும் இடையில் சோழர்கள் கட்டும் மாதிரியின்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

சந்திரப்பிரபாகர் ஆலயம்.

மகாவீரவர்த்தமானசுவாமீ கோயிலுக்கு தெற்கில் உள்ள தோட்டத்தின் நடுவில் 8-வது தீர்த்தங்காகிய சந்திரப்பிரபாகருடைய ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. இதன் சிற்ப சாஸ்திரங்களைக் கவனிக்கும்போது இது 8-ம் நூற்றுண்டில் பல்லவர்களால் கட்டப்பட்டிருக்கலாம் என்று அனுமானிக்க இடமுண்டு.

கிறிஸ்தவ ஆலயம்.

இங்கு கிறிஸ்தவர்களுக்காக 1922ஆு கவர்ன்மெண்டு ஆஸ் பத்திரிக்குக் கிழக்கில் ஒரு நிலம் வாங்கப்பட்டு, அதில் ஒரு ஆலயம் கட்டப்பட்டது. இதைச்சேர்ந்த மிஷனெரியும், உபாத்திமாரும், சுவிசேஷப் பிரசங்கிகளும் இதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் சேரிகளிலும் சென்று தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத் துக்காக அரும் பிரயாசையெடுத்து சமூகத் தொண்டாற்றியும், உயர் ஜாதி என்று கூறப்படுகிறவர்களால் உண்டாகும் துன்பங்களை நிவிர்த்தி செய்தும், கல்வி கற்பிக்கும்படி அநேக பாடசாலைகளை ஏற்படுத்தியும், மத போதனை செய்தும் வருகின்றனர். பல கிரா மங்களில் இப்பிரசாரத்தின் பலனாய் அநேகர் கிறிஸ்தவர்களாகி யிருக்கின்றனர்.

இங்கு நிரந்தரமாக இருக்கும் கிறிஸ்தவர்களின் தொகை மிகவும் சொற்பம். இங்குள்ள கிறிஸ்தவர்களின் கொடைகளால் கிராமச்சபை, பாடசாலை ஊழியங்கள் முதலியன நடைபெறுகின் றன. இந்நகரத்திலும் சுற்றுப்புறங்களிலும் வேலை செய்கிற உப தேசிமார் நால்வர். கனம் மெக்லீன் துரை தமது கலாசாலை ஊழி யத்தோடு, அவர்கள் செய்யும்வேலையை மேற்பார்த்து வருவதுமன்றி, தாமும் சமயப்பிரசாரம் செய்து வருகின்றார். மூன்று வேதாகம ஸ்திரீகள் இந்து, மகமதிய ஸ்திரீகளுக்கு கல்வி, தையல் முதலியவற் றைக் கற்பிப்பதுமன்றி, தங்கள் மதபோதனையும் போதித்து வருகின் றனர்.

இதற்குச் சமீபத்தில், உபாத்தியாயனிகளுக்காக ஒரு அழ கான விடுதி மார்க்கரற் (Margaret Fairly Daly) என்னும் ஒரு பெருமாட்டியின் பொருளுதவியைக்கொண்டு கட்டப்பட்டிருக்கின் றது.

மசூதிகள்.

மகமதியருக்காக அநேக மசூதிகள் கட்டப்பட்டிருந்தும், எல்லாவற்றிலும் சிறந்தது ஏகாம்பரர் கோவிலுக்குச் சமீபத்தில் இருப்பதே. எல்லா மசூதிகளும் இந்து ஆலயங்களுக்குச் சமீபத் தில் கட்டப்பட்டிருப்பது கவனிக்கற்பாலது. அக்கோவிலுக்குச்

சமீபத்தில் கட்டப்பட்டிருக்கும் மசூதியானது ஒரு காலத்தில் வாகனமண்டபமாயிருந்து மகமதிய அரசாட்சியின் போது இவ்வித மாக மாற்றிக் கட்டியிருப்பதை, அங்கிருக்கும் தூண்கள் முதலிய சிற்ப வேலைகளைக் கவனிப்பின் நன்கு விளங்கும். இங்கு 13 மசூதி கள் இருக்கின்றன. சிவகஞ்சி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிழக்கில் ஹமீது அவுலியா என்னும் ஒரு பக்த சிரேஷ்டரின் ஞாபகார்த்த மாக ஒரு தர்கா கட்டப்பட்டிருக்கின்றது. அதில் அவரது பிரே தம் சேமிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். அது முன்னொரு காலத்தில் காமாட்சியம்மன் கோவிலுக்குச் சொந்தமான ஒரு பூம் பொழிலாயிருந்தது என்று பலர் கூறுவர்.

ஒலிமகம்மதுபேட்டை என்று சொல்லப்படும் இடத்திலும், ஐதர் பேட்டையிலும் மகமதியர்கள் ஏராளமாக வசிக்கின்றனர். மகம்மதியர்களில் பலர் வியாபாரிகளாகவும், இன்னும் சிலர் லுங்கி வஸ்திரங்களை நெய்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறவர்க ளாகவும் இருக்கின்றனர்.

கல்வி.

இங்கு உயர்தர கலாசாலைகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று ஸ்கொத்லாந்து மிஷனைச் சேர்ந்தது. மற்றொன்று பச்சையப்ப முதலியாரின் தர்ம சொத்துக்களிலிருந்து நடத்தப்பெறுகிறது.

ஆண்டர்சன் (Anderson) கலாசாலை.

இதற்கு முன்னிருந்த பெயர் யு. எப். ஸி. எம். கலாசாலை. ஆனால், இந்த வருஷத்தின் ஆரம்பத்தில் அந்தப் பெயர் மாற்றப் பட்டு இதன் ஸ்தாபகரின் நாமதேயமாகிய ஆண்டர்சன் என்னும் துரையின் பெயரால் அழைக்கப்படுகின்றது. இக்கலாசாலை மிகவும் பூர்வீகமானது சென்னையில் இம்மிஷனை ஸ்தாபித்தவராகிய கனம். ஜான் ஆண்டர்சன் துரையவர்கள் தற்சமயம் உதாஸீ மடம் என்று சொல்லப்படும் சீக்கிய மடத்துக்குச் சமீபத்தில் இருந்த கிடங்கு ஒன்றில் 1839ஹு மேயீ 29உ ஏழு மாணவர்களோடு ஒரு பாட சாலையை ஆரம்பித்தார். அக்காலத்திலிருந்த மத வைராக்கியத்தி னாலும், ஜாதிக் கட்டுப்பாடுகளினாலும், வைதீக சம்பிரதாயங்களினா லும் அவருக்கு ஏற்பட்ட தொல்லைகள் அளவிடற்பாலதல. இக்

கஷ்டங்களின் மத்தியில் உயர் குலத்தார் என்று கூறும் பிராமண வைதீகர், தங்கள் பிள்ளைகளோடு இதர ஜாதிப் பிள்ளைகள் கலந்து வாசிப்பின், தோஷம் ஏற்பட்டு விடுமென்றும், பல கனவான்களைக் கொண்டு அவரது முயற்சி தடையுறும் வண்ணம், அம்மதத்தையும் அழித்து விடும்படி பிரயாசைப்பட்டனர். ஆனால், அம்முயற்சிகளெல்லாம் 'விழலுக்கிறைத்த நீர்' போல் வீணாயினதுமன்றி, துரையவர்களின் பொறுமையும் நன்மை செய்யும் பேரவாவும், இடையரு முயற்சியும், பசுமரத்தாணிபோல் அநேகர் மனதை ஊடுருவி, தாங்கள் எவ்வித இன்னல் இழைத்த போதினும், வெற்றியடையோம் என்னும் எண்ணம் உண்டாக தங்கள் முயற்சியைக் கைசோர விட்டனர்.

அதற்குப் பின், கச்சேரிக்குப் பின்னுள்ள காலி நிலம் வாங்கப்பட்டு, அங்கு இக்கலாசாலை கட்டப்பட்டது.

பலகஷ்டங்கள் மதசம்மந்தமாக ஏற்பட்டும், அது நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக விருத்தியடைந்து தற்காலம் இருக்கும்படியான நன்னிலை யெய்தியுள்ளது. அவருக்குப்பின், கனம் மெக்லீன் துரையவர்கள் காலத்தில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரையில் செலவிட்டு கலாசாலையைப் பெரிதாகக் கட்டி, போதனா முறைப்பயிற்சி பெற்ற அநேகம் உபாத்திமார்களை நியமித்து அதை விருத்தி செய்தனர். இவ்வளவு காலம் ஐரோப்பியரின் மேற்பார்வையிலிருந்த கலாசாலை இந்த வருட முதல் கலாசாலையின் தலைமை உபாத்தியாயராகிய கனம். ஞானதிக்கம் அவர்களின் ஆதீனத்துக்குள், நடைபெறுகின்றது. சுற்றுக் கிராமங்களிலிருந்து பல மாணவர்களும் வந்து வாசிக்கின்றனர். சின்னகாஞ்சிபுரத்திலும், வாலாஜாபாத்திலும், இதைச்சேர்ந்த இரு பாடசாலைகளில் ஏழாம் வகுப்பு வரையில் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. இக்கலாசாலை எல்லா விஷயங்களிலும் முன்னேற்ற மடைந்திருக்கிறது.

கலாசாலை மாணவருக்குப் போதிய விளையாட்டு ஸ்தலமின்மையால், பழைய மாணவர் சிரத்தையெடுத்து, பள்ளிக்கூடத்தின் பின்னுள்ள காலி நிலத்தை வாங்கும்படி தங்கள் சங்கத்தில் தீர்மானித்து, இக்கலாசாலையில் வாசித்த பழைய மாணவரும் மற்றுமுள்ள கனவான்களும் உதவி புரிவரென்று எதிர்பார்க்கின்றனர்.

பச்சையப்பன் கலாசாலை.

இது மூங்கில் மண்டபத்துக்குச் சமீபத்தில் உள்ளது. சென்னையில் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரிடம் துவிபாஷியாக இருந்த ஸ்ரீமான் பச்சையப்ப முதலியாருடைய தர்ம பரிபாலன சபையாரால் பெரியகாஞ்சிபுரம் இராஜவீதியில், வாடகைக்கு ஓர் வீடு எடுக்கப்பட்டு அதில் 1846ஹு மார்ச்சுமீ 23உ இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆதியில் ஆரம்பக்கல்வி மாத்திரம் போதிக்கப்பட்டது. பள்ளிக்கூட சம்பளம் நான்கு அணுவாக இருந்தபோதிலும் அநேக மாணவருக்கு இலவசக் கல்வியளிக்கப்பட்டது. இருபது வருஷங்களுக்குப் பிறகு இது உயர்தர கலாசாலையாக ஏற்படுத்தப்பட்டது. 1872ஹு தற்சமயம் இருக்கும்படியான கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது. 1903ஹு அக்கலாசாலையைச் சுற்றியுள்ள நிலங்கள், விளையாட்டு ஸ்தலத்திற்காகவும், வகுப்புகள் ஏற்படுத்துவதற்கு கட்டடங் கட்டுவதற்கும் வாங்கப்பட்டன. சின்னகாஞ்சிபுரத்திலும், அங்குள்ளோரின் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டது. இங்கு 7-வது வகுப்பு வரையில் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

தேவள்ள இராமசாமி ஐயா பாடசாலை.

இது நெல்லுக்காரத் தெருவில் இருக்கின்றது. தேவள்ள இராமசாமி ஐயா என்பவரின் மனைவி தனது கணவனின் ஞாபகார்த்தமாக ஒரு பாடசாலை ஏற்படுத்த வேண்டுமென்று ரூபா 10,000 கொடுத்ததைக் கொண்டு பெரியகாஞ்சிபுரத்திலிருந்த ஒரு பாடசாலையை பச்சையப்ப முதலியாரின் தர்ம பரிபாலன சபையார் வாங்கி 1906ஹு பெப்ருவரிமீ 5உ ஒரு பாடசாலையை ஆரம்பித்தனர். அதில் தற்சமயம் ஏழாவது வகுப்பு வரையில் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

முனிசிபல் பாடசாலைகள்.

மேற்கூறப்பட்ட பாடசாலைகளன்றி, முனிசிபல் நிர்வாகத்துக்குட்பட்ட அநேக ஆண் பாடசாலைகளும் பெண் பாடசாலைகளும் உள. இவைகளில், எல்லா மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் 1922ஹு முதல் கட்டாய ஆரம்பக்கல்வி இலவசமாய் அளிக்கப்படுகிறது. ஓர் வித்தியா இலாகா அதிகாரியால் அடிக்கடி இப்பாட

சாலைகள் பார்வையிடப்பட்டு, வேண்டுவன செய்யப்பட்டு வருவதால் மிக்க திறமைபெற்று சிறப்பெய்தியுள்ளன. முனிசிபல் சபைக்குச் சொந்தமாக 11 கட்டடங்களே யிருப்பதால், இதர பாடசாலைகள் வாடகை கட்டடங்களில் நடைபெறுகின்றன.

	ஆண்கள்.	பெண்கள்.
பள்ளிக்கூடம் செல்லக்கூடிய வயதுள்ள மாணவர்கள் ...	3,054	3,490
ஆஜராகும் மாணவர்கள்	2,905	980
பாடசாலைகள்	17	12
உபாத்திமார்	81	33

இவைகளை யல்லாமல் தனி நபர்களால் பிரத்தியேகமாய் நடத்தப் பெறும் 2 ஆரம்பப் பாடசாலைகள் இருக்கின்றன.

பெண் கல்வி.

நகர பரிபாலன சங்கத்தினரால் நடத்தப்பெறும் பெண் பாடசாலைகளை யல்லாமல் இதர பாடசாலைகளுமுண்டு.

1. போதனு முறை பாடசாலை:—

பெரியகாஞ்சிபுரத்தில் கவர்ன்மெண்டு பெண்கள் போதனு முறைப் பாடசாலையில் எட்டாவது வகுப்பு வரையில் போதிப்பது மன்றி, உபாத்திமைத் தொழில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இங்கு லோயர், ஹையர், கிரேடு மாணவிகளும் வாசிக்கின்றனர். அவர்களில் வெளியூரிலிருந்து வருபவர்கள் தங்கி, வாசிக்கும்படியாக கிறிஸ்தவர்களுக்காகவும், இந்துக்களுக்காகவும் பிரத்தியேகமாய் இரு விடுதிகள் இப்பாடசாலைக்குச் சமீபத்தில் உள்ளன.

2. மாடல் ஸ்கூல்:—

சின்னகாஞ்சிபுரத்தில் ஒரு பெண் பாடசாலை கவர்ன்மெண்டாரால் நடத்தப்பெறுகின்றது. இதில் முதலாம் பாரம் வரையில் கல்வி கற்றுக் கொடுக்கும்படி ஏற்பாடாகி வருகின்றது.

3. இந்து பாலிகா பாடசாலை:—

இது பெரியகாஞ்சீபுரம் ராஜவீதியில் நடத்தப்பெறுகின்றது. இதில் பாலர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையில் கல்வி கற்பிக்கப்படுகின்றது. இதில் அநேக இந்து மாணவிகள் வாசிக்கின்றனர்.

4. மிஷன் பாடசாலைகள்:—

ஸ்கொத்லாந்து மிஷனைச்சேர்ந்த மூன்று பெண் பாடசாலைகள், பெரியகாஞ்சிபுரத்திலுள்ள ராஜவீதியிலும், ஆடிசன்பேட்டையிலுள்ள மேட்டுத் தெருவிலும், சின்னகாஞ்சிபுரத்தில் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ள கட்டடங்களில் நடைபெறுகின்றன. அதில் பாலர் வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையில் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

இராப்பாடசாலைகள்:—

முனிசிபல் இரவு பாடசாலைகளையல்லாமல், பிரத்தியேகமாக பலரால் எழு இராப்பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. ஆண்டர்சன் கலாசாலை வாலிப மாணவ ஐக்கிய சங்கத்தினரால் 1914ஆு இரவு பாடசாலை யொன்று பகலில் தொழில் செய்யும் சிறுவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டு, இலவசக் கல்வி கற்பிப்பது மன்றி, புஸ்தகம், பலகை முதலியவைகளும் இலவசமாகக் கொடுத்து உற்சாகப்படுத்தி வருகின்றனர். அதுவுமன்றி எழுதப்படிக்கத் தெரியாத பெரியவர்களுக்கென்று ஒரு வகுப்பு ஏற்படுத்தி, (Adult School) அதில், சுகாதாரம், நீதிக்கதைகள், அரசியல், முதலிய அன்றாடக ஜீவியத்தில் நடைபெறும். சம்பவங்களைப் பற்றியும், உலக விஷயங்களை சமாசாரப் பத்திரிகைகளின் வாயிலாய் தெரிந்து கொள்ள பல சமாசாரப் பத்திரிகைகளும் வரவழைக்கப்பட்டு, லௌகீக ஞானமும், கல்விப்பயிற்சியும் பெறும்படியான வசதிகள் அளிக்கப்படுகின்றன.

சுகாதாரம்.

இந்நகரமானது நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நான்கு சானிடரி இஸ்பெக்டர்கள் நகர சுகாதாரத்தைக் கவனித்து வருகின்றனர். இம்முனிசிபாலிடியின் சுகாதார விஷயங்களைக் கவனிக்கும் பொருட்டு ஒரு முதல்தர சுகாதார உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். நகரத்திலுள்ள குப்பை முதலிய அசுத்தங்களை சுத்தம் செய்யும் பொருட்டு 52 தோட்டிகள் வேலை செய்து வருகின்றனர். வீடுகளிலுள்ள கக்கூசுகளையும், பொது கக்கூசுகளையும் சுத்திசெய்வதற்காக 45 தோட்டிகள் இருக்கின்றனர். 37 பொது கக்கூசுகள் இருக்கின்றன.

குப்பை, சாக்கடைத் தண்ணீர் முதலியவற்றை எடுத்துச் செல்லுவதற்காக 21 குப்பை வண்டிகளும் ஒரு மோட்டார் வண்டியும் இருக்கின்றன.

ஜல வசதி.

இந்நகரத்துக்குக் குடி தண்ணீர், குழாய்களின் மூலமாக வேகவதி யாற்றினின்றும் கிடைக்கின்றது. வேகவதியாற்றின் அடியில் அநேக ஊற்றுக்கள் தோண்டப்பட்டு வடி கால்களின் மூலமாய்க் கிணறுகளுக்குச் சென்று, பின்பு யந்திரத்தினால் இறைக்கப்பட்டு, பலவிடங்களுக்கும் அனுப்பப்படுகின்றது. காலை 5-30 மணியிலிருந்து 10-30 மணி வரைக்கும் மாலை 3-மணி முதல் 6-மணி வரைக்கும் தண்ணீர் இறைக்கப்பட்டு, அனுப்பப்படுகின்றது. கிண்டியிலுள்ள 'கிங் இன்ஸ்டிடியூட்' என்னுமிடத்தில் இந்த ஜலத்தைப் பரிசோதித்து மிகவும் நேர்த்தியான சுத்த ஜலம் என்று நற்சாட்சி கொடுத்திருக்கின்றனர். வீடுகளில் இருக்கும் தண்ணீர்க் குழாய்களின் தொகை 817. யந்திரத்தில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர் சிப்பந்திகள், நகரத்தில் இது சம்பந்தமாய் வேலை செய்யும் உத்தியோகஸ்தர் சிப்பந்திகளின் சம்பளம் நிலக்கரி, விறகு முதலியவற்றிற்காக செல்லும் செலவு வருஷத்தில் சுமார் ரூபா 20,000 ஆகின்றது.

வைத்தியம்.

நகரில் இருக்கும் வைத்திய சாலைகளின் பெயரும், ஸ்தானமும்.

1. கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியும், பிரசவ ஆஸ்பத்திரியும், கிறிஸ்தவ ஆலயத்துக்கு எதிரில் கட்டப்பட்டிருக்கின்றன. பிரசவ ஆஸ்பத்திரியின் கட்டிடம் ஸர். இராஜா இராமசாமி முதலியாரின் தர்மமாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இது சிறிது காலம் முனிசிபல் நிர்வாகத்துக்குட்பட்டிருந்து இப்பொழுது சர்க்கார் நிர்வகிக்கின்றனர் இங்கு மருந்தும் சிகிச்சையும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

மிஷன் ஆஸ்பத்திரி.

2. இது ஸ்கொட்லாந்து மிஷனால் ஏற்படுத்தப்பட்டது. காலஞ்சென்ற டாக்டர் ஹார்டி துரை அவர்கள் அதை நன்னிலைமைக்குக் கொண்டுவந்து விருத்தி செய்தார். அவருக்குப்பின் Dr. நத்தானியேல் வேதநாயகம் அவர்கள் அதை சீர்பெற நடத்தி

வருகின்றனர். அவர் தமது உதவி ஊழியர்களோடு பல கிராமங்களுக்கு மருந்துகள் கையில் எடுத்துச் சென்று பிரதம சிகிச்சை செய்தும், மற்றும்பல வியாதியஸ்தருக்கு மருந்துகள் கொடுத்தும் இன்னும் சில நோயாளிகளை சிகிச்சா சாலைக்குக் கொண்டு வரும்படி சொல்லி அவர்களைக் கரிசனையோடு பராமரித்தும், பொதுவாக எல்லாக் கிராமங்களைச் சந்தித்து வந்த போதிலும், சிறப்பாக சேரிகளில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக செய்து வரும் ஊழியம் மிகவும் பாராட்டற்பாலது. இதுவுமன்றி ஒளிச் சித்திரப்படக்காட்சியின் மூலமாயும் (Magic lantern) உபந்நியாசங்களின் மூலமாயும் மத உபதேசம் செய்கின்றனர். இங்கு மருந்துகள் கிரயத்திற்குக் கொடுக்கப்பட்ட போதிலும், திரளான மக்கள் இதை நாடி வருகின்றனர். இங்கு ஆஸ்பத்திரி வேலையில் உதவி செய்வதற்காக ஒரு உதவி டாக்டரும் இருக்கின்றார்.

3. முனிசிபல் டிஸ்பென்சரி, (புத்தேரித்தெரு.)
4. ,, (ஆடிசன்பேட்டை)
5. ,, (சின்னகாஞ்சிபுரம்)
6. பிரைவேட் டிஸ்பென்சரி—Dr. P. S. ஸ்ரீனிவாச ஐயர், L. M. P., (ஆடிசன்பேட்டை)
7. ,, Dr. P. S. அனந்தநாராயணஐயர், L. M. P., (நெல்லுக்காரத்தெரு)
8. ,, Dr. T. K. நடேசஐயர், L. M. P., (சாலைத்தெரு)
9. ஆயுர்வேத வைத்திய சாலை— நாராயண ஸேவாஸ்ரமம் (பெரியகாஞ்சிபுரம்)
10. ,, Dr. வெங்குடி, வெங்கிடேச ஐயர் (திருக்கச்சிநம்பித்தெரு)
11. யூனானி வைத்திய சாலை— Dr. கரீம்கான் சாயப்பு. (வைகுண்டப்பெருமாள் கோயில்சமீபம்)
12. குழந்தைகள் வைத்தியம்— சாந்தாலீஸ்வரர் கோவில் குருக்கள், சின்னகாஞ்சிபுரம்.

மிருக வைத்தியசாலை.

கால் நடைகளுக்கும், இதர மிருகங்களுக்கும் ஏற்படும் நோய்களை நிவிர்த்திப்பதற்கென்று கவர்ன்மெண்டாரால் 1926வரு சேக்குப்பேட்டை கவரைத்தெருவில் ஒரு வைத்திய சாலை ஏற்படுத்தப்

பட்டிருக்கின்றது. இங்கு நகரத்திலுள்ள நோயுள்ள மிருகங்கள் மாத்திரமேயன்றி, சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் சிகிச்சைக்காக மிருகங்கள் கொண்டு வரப்படுகின்றன.

கைத்தொழிலும் வியாபாரமும்.

இங்கு ஒரு காலத்தில் மான்செஸ்டர் நகரத்தில் நெய்யப்படும் துணிகளைக் காட்டிலும், மெல்லியனவாகவும் மிகவும் உயர்ந்தனவுமான துணிகள் நெய்யப்பட்டு கிழக்கிந்திய வர்த்தகரால் வியாபாரத்தின் பொருட்டு வாங்கப்பட்டு பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டு வந்தது. ஆனால், மான்செஸ்டர் ஜவுளி வியாபாரம் தலையெடுக்க ஆரம்பித்தவுடன் இவைகளெல்லாம் தேடுவாரற்று தொழிலே நசித்துவிட்டது.

ஆனால் இன்னும் அநேகர் நெசவுத்தொழிலையே தங்கள் ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கின்றனர். இங்கு சுமார் 10,000-க்கு மேற்பட்ட கைத்தறிகள் உள. இது நெசவுத்தொழிலுக்கு மிகவும் பேர்போன இடம். நெசவுத்தொழிலையே தங்கள் குலத்தொழிலாகவுடைய செங்குந்த மரபினர் அநேகர் பிள்ளையப்பாளையம் என்று சொல்லப்படும் இடத்தில் பருத்தி நெசவுத்தொழில் நடத்துகின்றனர். பலவித வேஷ்டிகளும் புடவைகளும் நெய்யப்படுகின்றன. சேக்குப்பேட்டை என்றவிடத்தில் பட்டுநூல்காரர் என்ற ஜாதியினரால் பட்டுத்தொழில் நெசவு நடைபெறுகின்றது. அநேக விலையுயர்ந்த புடவைகளும் பட்டு வஸ்திரங்களும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நெசவுத் தொழில் பாவமில்லாத தொழில் என்று அநேகர் இதைத் தங்கள் ஜீவனத்தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இதனாலேயே "காஞ்சிபுரம் போனால் காலாட்டி சாப்பிடலாம்" என்னும் பழமொழி ஏற்பட்டிருக்கின்றது.

இங்கு சர்க்கார் நெசவுத் தொழில் நிபுணர் ஒருவர் இருக்கின்றார். அவர் நவீன கருவிகளைக் கொண்டு ஜனங்களுக்கு சுலபமான வழியில் நெய்யும் முறைகளைப் போதித்து வருகின்றார். அநேக வீடுகளில் கைராட்டினத்தில் நூல் நூற்பதுமன்றி, கதர் ஜவுளி வியாபாரம் விருத்தியடைந்து வருவதினால் சுதேசித் தொழில் மிகவும் ஆதரிக்கப்படுகின்றது.

வெள்ளி, பொன், பித்தளை, செம்பு முதலிய உலோகங்களால் பலவிதமான பாத்திரங்களும் ஆபரணங்களும் செய்யப்படுகின்றன. சிறந்த ஜமுக்காளங்களும் இங்கு நெய்யப்படுகின்றன.

ஆடிசன்பேட்டை என்று சொல்லப்படும் இடத்தில் பெரிய ஜவுளிக்கடைகளும், வியாபார ஸ்தலங்களும் இருக்கின்றன. மற்றும் பலவிதமான மருந்துக்கடைகளும், தேருக்குச் சமீபத்திலும், பெரியகாஞ்சிபுரம் கடைத்தெருவிலும் இருக்கின்றன.

டான்ஸ் மார்க்கெட்டுக்குச் சமீபத்தில் ஆடுகள் அடிக்கும்படியாக பிரத்தியேகமாய் ஒரு இடம் கட்டப்பட்டிருக்கின்றது. ஆடுகளை அறுக்கு முன்னும் பின்னும், மிருக வைத்தியசாலை நிபுணர், அவைகளைப் பரிசோதித்து, வியாதியுள்ளவைகளை அறுக்காதபடிக்கும், நல்ல இறைச்சியை முத்திரை போட்டும் வியாதி பரவவிடாமல் தடுத்தும், நன்மை புரிந்து வருகிறார். இதனால் நோயுள்ள ஆடுகளால் ஜனங்களுக்கு தீமை நேரிடாதபடி தப்புவிக்கப்படுகிறது.

தீர்த்தங்களும் ஸ்நானக் கட்டங்களும்.

இங்குள்ள குளங்கள் மிகவும் விசேஷித்தவைகளாகக் கருதப்பட்டு, வாரத்தின் நாட்களாகிய ஏழுநாட்களுக்கும் முறையே, ஏழு தடாகங்களுக்குப் பெயர்கள் கொடுக்கப்பட்டு மிகவும் புனிதமாகக் கருதப்பட்டு வருகின்றன. அவைகளில் ஒவ்வொரு நாளும் முறையே ஸ்நானம் செய்து வந்தால் கோரிய பலன் கைகூடுமென்னும் ஐதீகமுண்டு. ஒன்றில் ஸ்நானம் செய்தால், தேகம் பொலிவு பெற்றெழு மென்றும், மற்றொன்றில் ஸ்நானம் செய்யின் இந்திரலோகம் எய்தலாம் என்றும், வேறொன்றில் தீர்த்தமாடின், கோரியவை யாவும் கை கூடும் என்றும், பிறிதொன்றில் நீராடின், எல்லாக கஷ்டங்களும் 'சூரியனைக்கண்ட பனி போல்' விலகுமென்றும், இன்னொன்றில் குளித்தால் சுவர்க்கலோகம் சித்திக்கும் என்றும், மற்றொன்றில் மூழ்கி யெழுந்தால், அறிவு விருத்தியடையுமென்றும், வேறொன்றில் ஸ்நானம் பண்ணினால் பாப கருமங்களெல்லாம் தொலைந்துவிடும் என்றும் கூறப்படுகின்றன. சிவன் கோவிலிலும், விஷ்ணு கோவிலிலும் இருக்கும் திருக்குளங்கள் மிகவும் அழகாகவும் கருங்கல் படிகள் வைத்துக் கட்டப்பட்டும், சதுரமாகவும் அழகு வாய்ந்து நடுவில் நீராழி மண்டபத்தோடு கூடியவைகளாகவும் சிறந்து விளங்குகின்றன. அநேக குளங்களிலுள்ள ஜலம், தூர்வையெடுக்காதிருப்பதனால் மிகவும் அசுத்தமாகவும், பாசி படிந்தும் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. அப்படியிருந்தும் அடியிற்கண்ட குளங்கள் ஸ்நானம் செய்யத்தகுந்தவைகளாகும்.

1. சர்வ தீர்த்தம், பெரியகாஞ்சிபுரம்.
2. ஓணகாந்தேசுவரர் குளம், பஞ்சுப்பேட்டை.
3. சிவகெங்கை, ஏகாம்பரநாதர் கோவில்.
4. காமாக்ஷியம்மன்கோயில் குளம், காமாக்ஷியம்மன் கோயில்.
5. கச்சபேஸ்வரர் குளம், கச்சபேஸ்வரர் கோவில்.
6. அநேகதங்காபதம் குளம், கைலாசநாதர் கோவில் சமீபம்.
7. ஒக்கப்பிறந்தான் குளம், ஒக்கப்பிறந்தான் குளத்தெரு.
8. வேப்பங்குளம். } திருக்காவிமேடு என்னும் திருக்
9. இந்திர தீர்த்தம். } காரைக்காடு.
10. அஷ்டபுஜம், சின்னகாஞ்சிபுரம்.
11. வெள்ளக்குளம், வரதராஜர் கோவிலின் தென்பாரிசம்.
12. அனந்தசரசு, } வரதராஜப் பெருமாள்
13. பொற்றாமரைக்குளம். } கோவில்.

பாங்குகள்.

1. இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா, கிளை ஆபீஸ், ஆடிசன் பேட்டை.
2. செங்கல்பட்டு ஜில்லா சென்ட்ரல் பாங்கி, குசத்தெரு.
3. பப்ளிக் சர்வன்ட்ஸ் ஐக்கிய நாணயச்சங்கம், சென்ட்ரல் பாங்கி கட்டடம்.
4. நில அடமான பாங்கி, ,,
5. செங்கற்பட்டு ஜில்லா பெடரேஷன், ,,
6. செங்கற்பட்டு ஜில்லா ஐக்ய நாணய உத்தியோகஸ்தர்களின் சங்கம். ,,
7. சிக்கன தனவிருத்தி சங்கம். ,,
8. ஒலிமகம்மதுபேட்டை ஐக்ய நாணய சங்கம்,,
9. பிள்ளை பாளையம் ,,
10. ரெட்டிப்பேட்டை ,,
11. காஞ்சி சுவாமிக்கண்ணு பிள்ளை ,, சின்னகாஞ்சிபுரம்.
12. அமரேச்வரர் ,, பெரிய காஞ்சிபுரம்.
13. முனிசிபல் சிப்பந்திகளின் ,, முனிசிபல் ஆபீஸ்.
14. C. S. மிஷன் ஊழியர்களின் ,, மிஷன் கலாசாலை.
15. தனரக்ஷக நிதி, ,, ஆடிசன்பேட்டை.
16. அர்ப்பன் பாங்க், சின்ன காஞ்சிபுரம்.
17. டவுன் பாங்கி, பெரிய காஞ்சிபுரம்.
18. சிவராமய்யர் பாங்கி, சேக்குப்பேட்டை நடுத்தெரு.

கச்சேரிகள்.

1. முனிசீப் கோர்ட்.
2. தாலூக்கா ஆபீஸ்
3. சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்
4. சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்
5. பெஞ்சு கோர்ட்.
6. ஸப் ஜெயில்,

} இவைகள் எல்லாம் குசத்தெருவில் காம்பவுண்டுக்குள் இருக்கின்றன.

7. இன்கம்டாக்ஸ் ஆபீஸ், சேக்குப்பேட்டை நடுத்தெரு.
8. பள்ளிக்கூட டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸ், மிஷன் ஆஸ்பத்திரிக்கெதிரில்.
9. தபாலாபீஸ் இராஜவீதி, பெரியகாஞ்சிபுரம்.
   ,, ஆடிசன்பேட்டை.
   ,, கிளை. சின்னகாஞ்சிபுரம்,
10. முனிசிபல் ஆபீஸ், நெல்லுக்காரத்தெரு.
11. சிவகஞ்சி போலீஸ் ஸ்டேஷன், பெரியகாஞ்சிபுரம்.
12. தாலூக்கா ,, ,,
13. விஷ்ணு கஞ்சி ,, சின்னகாஞ்சிபுரம்.
14. பஞ்சாயத்து கோர்ட்டு — பெரிய காஞ்சீபுரம்.
    ,, ,, சின்ன காஞ்சிபுரம்.

வாசக சாலையும் விளையாடு மிடங்களும்.

1. காஞ்சிபுரம் காஸ்மாபாலிடன் அஸோஸியேஷன்—
   மிஷன் ஆஸ்பத்திரிக்கும், கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிக்கும் மத்தியிலிருக்கின்றது.
2. வாசக சாலையும், டேன்னிஸ் கிளப்பும்—
   முனிசீப் கோர்ட்டுக்குச் சமீபம்.
3. திரு. சி. டி. எஸ். பெருமாள் முதலியார் இலவச வாசக சாலையும், புத்தகசாலையும், இரட்டை மண்டபம்.
4. மகமதிய யுவர்கள் சங்கம், வடக்கு இராஜவீதி, பெரிய காஞ்சிபுரம்.

அச்சு நிலையங்கள்.

1. சந்திரபானு பிரஸ், விளக்கொளி பெருமாள்கோயில் தெரு.
2. குமரன் பிரஸ் — நெல்லுக்காரத்தெரு.
3. யுனைட்டெட் அச்சுக்கூடம்— ஆடிசன்பேட்டை.
4. டவுன் பிரஸ் — புத்தேரித்தெரு.
5. ஸ்ரீ கிருஷ்ணவிலாசம் பிரஸ்— ஆடிசன்பேட்டை.
6. சுதர்சன பிரஸ் — சின்னகாஞ்சிபுரம்.

முக்கியமான சத்திரங்கள்.

1.	மண்ணையாகிருஷ்ண சத்திரம்,		லிங்கப்பையர் தெரு பெரியகாஞ்சிபுரம். (பிராமணர்கள்மாத்திரம்.)
2.	குஜராத்தி	,,	சாலத்தெரு
3.	இராஜா	,,	,,
4.	பச்சையப்ப முதலியார்	,,	தேரடி, பெரிய காஞ்சிபுரம்.
5.	ஆரியவைசியர்	,,	இராஜவீதி. (வைசியர்)
6.	வாசபாலையா	,,	,, ,,
7.	கிஷ்டப்பா செட்டி	,,	,, ,,
8.	நாராயண செட்டி	,,	,, ,,
9.	கொல்லா	,,	,, ——
10.	வெங்கட சுப்பையா	,,	நெல்லுக்காரதெரு நாள் 1-க்கு மெத்தையில்தங்க ரூ. 1. கீழ் அறையில் தங்க அ. 8. (பிராமணர்கள்.)
11.	பணிசெய்வோர்	,,	நெல்லுக்காரத்தெரு
12.	யாதவர்	,,	கீழண்டை ராஜவீதி
13.	வன்னியர்	,,	,,
14.	குலாலர்	,,	வடக்கு ராஜவீதி
15.	ஞானம்பாள்	,,	,,(கருணீகர்)
16.	முத்தியாலு ரெட்டியார்	,,	குசத்தெரு.
17.	யாதவர்	,,	பச்சையப்பன் கலாசாலைக்கு எதிரில்
18.	கோவிந்தப்ப நாய்க்கர்	,,	ஆடிசன்பேட்டை.
19.	ஜவுளிக்கடை	,,	,,
20.	செம்படவர்	,,	,, (தேரடி)
21.	யாதவர்	,,	திருக்கச்சிநம்பித் தெரு
22.	கம்மாவர்	,,	,,
23.	ஐயாப் பிள்ளை	,,	,,
24.	இராம நாய்கர்	,,	,,
25.	உத்திராதி மடம்	,,	சேதுவாராய பிள்ளைத்தெரு
26.	வியாஸராயர் மடம்	,,	தெற்கு மாடவீதி

68853

இவைகளில் ஹிந்துக்கள் மாத்திரம் சாதாரணமாக மூன்று நாட்கள் தங்கலாம். இவைகளைத் தவிர அனேக சத்திரங்கள் இருந்தபோதிலும், அவைகளில் ஜனங்கள் குடியிருப்பது மன்றி சிற்றுண்டி சாலைகளாகவும் உபயோகப்பட்டு வருகின்றன.

உயர்ந்த சரக்குகள் ! **குறைந்த விலை!!**

நம்பிக்கையும் நாணயமு முள்ள வர்த்தக சாலை.

ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

பரிமள மிகுந்த தஞ்சாவூர், கும்பகோணம், ஊதுவத்திகள்.

நறுமணங்கமழும் பலவூர் அத்தர் தினுசுகள், காஜிபூர் பன்னீர், மைசூர் சந்தன சோப்புகள், கிரிமஞ்சி விதை, கபிலி பொடி, சாய தினுசுகள், வெள்ளி

சரிகை, கூந்தல் தைலங்கள், மிஸ்கி பெருங்காயம் உயர்ந்த ஷர்பத் தினுசுகள் வாசனை வஸ்துக்கள், மருந்து வகைகள், சிரநோய் நீக்கும்

அரைக்கீரை, சந்தனாதி தைலங்கள், கலப்படமற்ற உயர்ந்த நெய், நெல்லூர் பச்சரிசி, நஞ்சன்கூடு முதலிய பல பற்பொடி தினுசுகளும், சிறந்த யஞ்சள் சிகைக்காய் தூளும், கோதுமை, கடலை மா வகைகளும், அசல் நீலகிரி காப்பி, தேயிலை ரகங்களும், ஓவல்டின், கிளாக்ஸ் ஓ, இடைச்சிக்குறி கட்டிப்பால், லாக்டோஜன், ஓவல்டின் முதலிய குழந்தை ஆகாரவகைகளும் கார்பாலிக், போரக்ஸ் சோப்புகள், இன்னும் இதர சாமான்களும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் மிகவும் சரசமான விலைக்குக் கொடுக்கப்படும்.

K. சாம்பசிவ செட்டியார்,

சரிகை, சாய வியாபாரம் அண்டு பலசரக்கு மளிகை,

டான்ஸ் மார்க்கட்டு, காஞ்சிபுரம்.

BOY SCOUT EQUIPMENT.

UNIFORMS, SIGNALLING FLAGS, AXES, SCARF RINGS, HAVERSACS, RUC SACS, CUB CAPS, WHISTLES, KNIVES, ETC.,

Books on Cubbing, Scouting and Rovering.

(Also Tamil Scout Books.)

Write to your official Suppliers:—

The South Indian Scout Eqt., Co.,

175, BROADWAY, MADRAS.

டவுன் ஸ்டுடியோ.

நெல்லுக்காரத் தெரு, காஞ்சிபுரம்.

எல்லாவிதமான போட்டோ படங்களும், புரோமைட் என்லார்ஜ் மெண்டுகளும், மிகவும் சரசமாய் குறித்த காலத்தில், அழகாகச் செய்து தரப்படும்.

M. P. நடராஜ ஆச்சாரி,

புரொப்ரைடர் & நகை வியாபாரி.

மயர்ஸ் ஸ்பிரே பம்புகள்.

தோட்டங்களை குளிர்ச்சியாகச் செய்கின்றன, தொத்து வியாதிகள் அணுகா வண்ணம் வீடுகளைப் பாதுகாக்கின்றன.

மயர்ஸ் கை & பவர் பம்புகள்.



உங்களுக்கு அநேக விதங்களில் உபயோகப் படும்.

அவைகள்:— உங்களுடைய மோடார் கார்களைப் பளிங்கு போல சுத்தம் செய்கின்றன, வீடுகளைக் கழுவுகின்றன.

எவ்வளவு ஆழத்திலிருந்தும் தண்ணீர் எடுக்கின்றன.

ஸ்டோவர் என்ஜின்கள்.

நீர்ப்பாசனத்திற்கும் இதர வேலைகளுக்கும் உபயோகமானவை

உடனே எங்களுக்கு எழுதுங்கள் :—

இந்தியாவின் ஸோல் ஏஜெண்டுகள்,

லிமாயி பிரதர்ஸ் லிமிடெட்.

பிராட்வே. மதராஸ். தபால்பெட்டி, 202.

அல்லது:—

K. ரங்கஸ்வாமி,

22, எதோத்காரி தெரு, காஞ்சிபுரம்.



உயர்ந்த பட்டணம் பொடி.

மணம், குணம், வாடை, காரம், நிறம், ஒருங்கே யமைந்தது.

	ரூ அ பை.
ஒரு வீ. அல்லது 5 சேர் கொண்ட டின் விலை	3—4—0
½ வீ. அல்லது 2½ சேர்.	1—4—0
¼ வீ. அல்லது 1¼ சேர்	0-15—0
1 சேர் அல்லது 8 பலம்	0-12—0

பாக்கிங் தபால் சார்ஜ் செலவு பிரத்தியேகம்.

ஜி நாராயணசாமி நாயுடு,
Post Box No. 241,
மின்ட் பில்டிங் போஸ்டு,
மதராஸ்.

RELIABLE STALL

FOR

Vegetable Buyers.

FRESH OOTY & BANGALORE
VEGETABLE ALWAYS IN STOCK.

Orders will be executed promptly to the Customers Satisfaction.

A TRIAL ORDER
EARNESTLY SOLICITED.
TRY ONCE WITH

U. R. Bakthavaschaloo Naidu,

English Vegetables Fruits & General Supplier,
No. 50, Moore Market, MADRAS.

இங்கிலீஷ்

தமிழ் தெலுங்கு

மொழிகளில், ஏராளமான அழகிய

புதிய எழுத்துக்கள்.

விரைந்தோடும் தற்கால நவீன

மெஷின்கள்.

தேர்ந்த தொழில் நிர்வாகம்.

பெரிய புத்தகங்களும், கலர்வேலைகளும்,

கணக்குப் புத்தகங்களும்,

குறைந்த காலத்தில் நிறைந்த வேலைகள்

செய்து கொள்வதற்கு

சிறந்த இடம்

குமரன் பிரஸ்,

காஞ்சீபுரம்.

நிதானிக்க!

நமது செல்வமெல்லாம் விரயமாகின்றனவே!

ஏன்?

தாங்கள் இந்திய கம்பெனிகளில் இன்ஷியூர் செய்து
இந்திய மக்களின் செல்வத்தைச் அயல் நாடுகள்
அபகரியா வண்ணம் இந்தியாவிலேயே
நிறுத்தலாகாதா?

நேஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி

ஒன்றே சிரேஷ்டமானதும், செல்வாக்குள்ளதும், இந்தியரின் தேவைகளை திருப்தி செய்யக்கூடியதுமாகவும் அமைந்துள்ளது. இந்தியக் கைத்தொழில்களை ஆதரித்து, சுதேசிய உடையாகிய கதராடை புனைகின்ற நாம் நமது சுதேச கம்பெனிகளில் இன்ஷியூர் செய்து, ஏன் நமது செல்வத்தை அபிவிருத்தி செய்யலாகாது?

அவ்வண்ணம் செய்யாது விடுப்பின் வருடந்தோறும், அநியாயமாக இந்தியரின் செல்வமாகிய ஐந்து கோடி ரூபாய்கள் அந்நிய தேசங்களுக்கு பிரிமியமாக அனுப்பப்பட்டு நம் தாய் நாடு வறுமையடைவளே! இது இந்திய மக்களின் முன்னேற்றத்துக்கு தடையாயுள்ள ஓர் முட்டுக்கட்டையல்லவா?

இந்தியாவிலேயே

நேஷனல் இன்ஷியூரன்ஸ்

கம்பெனியைப்போன்ற கம்பெனிகள்
இருக்குங்கால்

ஏன் கவலைப்படுகின்றீர்கள்?

ஏஜெண்டாக இருக்க விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு மனுச்செய்து கொள்ளலாம்.

நேஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

113, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.

உ

ஸ்ரீ செல்வகணேசர்
சோடா பாக்டரி,

இராஜவீதி, காஞ்சிபுரம்.

மனோரஞ்சனி . வெனிலா

மிக மணமாயிருக்கும், வெகு இனிப்பாயிருக்கும்.

கலர்களுக்கு அஸ்கா உபயோகப்படுத்தப்படுகிறது.

போலி லேபில்களுக்கு ஏமாராதீர்கள்.

சோடா, லெமனெட், கலர்கள், கிரஷ்; கலியாணம் முதலிய சுபா சுபங்களுக்கும், டீ பார்டிகளுக்கும், எக்ஸ்கர்ஷன்களுக்கும், ஸ்பெஷல் கன்செஷன் ரேட்டில் சப்ளை செய்யப்படும்.

பன்னீர், ஆரஞ்சி.

பன்முறை தெரிந்ததே. அருமையானது.

சரக்குக்கும் குறிக்கும் டயத்திற்கும் உத்திரவாதம்.

"நவரத்ன" திராக்ஷாஸவம்.

இந்த கலர் ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இது முக்கியமாக அஜீரணம், கபம், நரம்புத் தளர்ச்சி; சாதாரணமாக இருமல், ஜலதோஷம், வயிற்று வலி, பசியின்மை, மலச்சிக்கல், வயற்றுக்கழிச்சல், வயிற்று உப்பசம் முதலிய வியாதிகளைப் போக்குகிறது.

V. M. சிதம்பரமுதலியார்,

ப்ரொப்ரைடர்.

உ

டவுன் பிரஸ்,

காஞ்சிபுரம்.

விஸிடிங் கார்டுகள், கார்டு, கவர் ஹெட்டிங், லெடர் பேபர்கள்; கலியாணம், ஸீமந்தம் முதலிய பத்திரிகைகள்; சாருபடி, குத்தகை மூச்சலிக்கைகள்; கோர்ட்டுகளுக்கும் சொசைடிகளுக்கும் வேண்டிய பாரங்கள், ரசீது புஸ்தகங்கள்; கலர் கில்ட் பிரிண்டிங் முதலிய எல்லா ஜாப் வேலைகளையும்; பேரேடு, கையேடு, பட்டியல் முதலியவைகளையும்; நேர்த்தியாகவும், குறித்த காலத்திலும், தமிழிலும் இங்கிலீஷிலும் செய்து கொடுக்கப்படும்.

இவற்றிற்காக வேண்டிய பேபர் தினுசுகள் ஏராளமாக வரவழைக்கப்பட்டிருக்கின்றன.

புத்தேரித் தெரு,
காஞ்சிபுரம்,
24—5—31.

P. சுந்தரமூர்த்தி பிள்ளை,
ப்ரொப்ரைடர்.

காஞ்சிக்கு விஜயம் செய்யுங்கால்

எமது ஜவுளி உற்பத்தி சாலையைக் கண்டு களிக்காது செல்லவேண்டாம்.

P. V. EASWARA ROW.

எமது ஜவுளிகளை வாங்குவதனால் நீங்கள் சுதேசித் தொழிலை விருத்தி செய்வதுமன்றி, நம் நாட்டு மக்களை ஆதரிக்கவும் செய்கின்றீர்கள் என்பது திண்ணம்.

தற்காலம் ஜவுளி விலை மிகவும் குறைந்து விட்டபடியால், சகோதர சகோதரிகளுக்கும் தெரிவிப்பது யாதெனில் வியாபாரிகளில் சிலர், ஜவுளிகள் முன் விலைக்கு வாங்கி தற்கால விலை குறைந்து விட்டதினால், பின் விலை தள்ளிக் கொடுக்க மனம் வராமல் நல்ல விலைக்கு விற்று விடலாமென்று இருப்பதினால் நண்பர்கள் அதை முக்கியமாய் கவனித்து ஏமாராது புதிய குறைந்த விலைக்கு தயாரித்துள்ள எங்கள் புதிய ஜவுளி தினுசுகளை வாங்கி திருப்தியடையுங்கள்.

தந்தி விலாசம்:— ஈஸ்வரராவ்,

பி. வி. ஈஸ்வர ராவ்,
சுதேசி ஸில்க் ஹவுஸ், காஞ்சிபுரம்.